# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2016 DECEMBER

மலர்: 10 இதழ் : 3 டிசம்பர் 2016 விலை : ரூ. 5



## உலகை அடக்கியாளும் வெற்றுக்காகிதங்கள்!




## மதிப்பில்லா வாக்குறுதிப் பத்திரங்கள்!

# செல்வம் என்ற சோதனை

● ஒவ்வொரு சமுதாயத்திற்கும் சோதனைகள் இருக்கின்றன. என்னுடைய சமுதாயத்தின் சோதனை செல்வமாகும் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். அறிவிப்பவர் : கஅப் (ரலி) நூல் : அஹ்மத்

● **உங்களின் மக்கட்செல்வமும், பொருட்செல்வமும் சோதனை என்பதையும், அல்லாஹ்விடம் மகத்தான கூலி உண்டு என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்! (திருக்குர்ஆன் 8:28)**

● **செல்வமும், பிள்ளைகளும் இவ்வுலக வாழ்க்கையின் கவர்ச்சியாகும். நிலையான நல்லறங்களே உமது இறைவனிடம் கூலியில் சிறந்ததும், எதிர்பார்க்கப்படுவதில் சிறந்ததுமாகும். (திருக்குர்ஆன் 18:46)**

● **பெண்கள், ஆண்மக்கள், திரட்டப்பட்ட தங்கம் மற்றும் வெள்ளியின் குவியல்கள், அழகிய குதிரைகள், கால்நடைகள், மற்றும் விளை நிலங்கள் ஆகிய மனவிருப்பம் ஏற்படுத்தும் பொருட்களை நேசிப்பது மனிதர்களுக்குக் கவர்ச்சியாக்கப்பட்டுள்ளது. இவை இவ்வுலக வாழ்க்கையின் வசதிகள். அல்லாஹ்விடம் அழகிய புகலிடம் உள்ளது. (திருக்குர்ஆன் 3:14)**

● **மண்ணறைகளைச் சந்திக்கும் வரை அதிகமாகத் (செல்வத்தை) தேடுவது உங்கள் கவனத்தைத் திருப்பி விட்டது. (திருக்குர்ஆன் 102:1)**

● **குறை கூறிப் புறம் பேசும் ஒவ்வொருவனுக்கும் கேடுதான். அவன் செல்வத்தைத் திரட்டி அதைக் கணக்கிடுகிறான். தனது செல்வம் தன்னை நிலைத்திருக்கச் செய்யும் என்று எண்ணுகிறான். அவ்வாறில்லை! ஹுதமாவில் அவன் எறியப்படுவான். ஹுதமா என்பது என்னவென உமக்கு எப்படித் தெரியும்? மூட்டப்பட்ட அல்லாஹ்வின் நெருப்பு. அது உள்ளங்களைச் சென்றடையும். நீண்ட கம்பங்களில் அது அவர்களைச் சூழ்ந்திருக்கும். (திருக்குர்ஆன் 104:1)**

● நான் (விண்ணுலகப் பயணத்தின்போது) சொர்க்கத்தை எட்டிப் பார்த்தேன். அங்கு குடியிருப்போரில் ஏழைகளையே அதிகம் கண்டேன். நரகத்தையும் எட்டிப் பார்த்தேன். அதில் குடியிருப்போரில் பெண்களையே அதிகம் கண்டேன் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(நூல் : புகாரி 3241, 5198, 6449, 6546)

● இந்தச் செல்வம் பசுமையானதும் இனிமையானதும் ஆகும். அதை முறைப்படி அடைந்து, அதை அல்லாஹ்வின் பாதையிலும், அனாதைகளுக்காகவும், ஏழை எளியவர்களுக்காகவும் செலவிட்ட முஸ்லிமுக்கு அந்தச் செல்வம் சிறந்த தோழனாகும். அதை முறைப்படி அடையாதவன் உண்டும் வயிறு நிரம்பாதவனைப் போன்றவன் ஆவான். அச்செல்வம் மறுமை நாளில் அவனுக்கெதிராகச் சாட்சி சொல்லும்““ என்று கூறினார்கள். (நூல் : புகாரி 2842)

● ”ஏழை முஹாஜிர்கள் செல்வந்தர்களை விட நாற்பதாண்டுகளுக்கு முன்பே மறுமை நாளில் சொர்க்கத்துக்குச் சென்று விடுவார்கள்“ என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். (நூல் : முஸ்லிம் 7654)

● **நம்பிக்கை கொண்டோரே! உங்களின் பொருட்செல்வமும், மக்கட்செல்வமும் அல்லாஹ்வின் நினைவை விட்டு உங்களைத் திசை திருப்பி விட வேண்டாம். இதைச் செய்வோரே நஷ்டமடைந்தவர்கள். (திருக்குர்ஆன் : 63:9)**

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**THIRU QURAN NARCHEYDHI MALAR - 2016 DECEMBER**

**மலர்: 10 இதழ் : 3 டிசம்பர் 2016 விலை : ரூ. 5**

## பொருளடக்கம்

மதிப்பில்லா வாக்குறுதிப் பத்திரங்கள் *-2*
காகிதப்பணம் வந்த கதை *-4*
நம்மை அடிமைப்படுத்தி வைத்திருப்பது யார்? *-5*
வஞ்சக வலைக்கெதிராக இஸ்லாம *-8*
என்று பெறுவோம் விடுதலை? *-11*
பூனைக்கு மணி கட்டுவது யார்? *-13*
இஸ்லாம் எப்படி அநியாயங்களுக்கு
எதிராகப் போராடுகிறது? *-15*
பாமரர்களுக்கும்
படித்தவர்களுக்கும் பாடங்கள் *- 17*
பிறவிப்பயனை வீணடிக்கும் நாத்திகம் *-20*
வாசகர் எண்ணம் *-21*
வறுமையும் செல்வமும் சோதனையே *-22*
இறுதிநாள் நெருங்க நெருங்க..*-23*

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# மதிப்பில்லா வாக்குறுதிப் பத்திரங்கள்

இன்று முழு நாட்டையும் கொந்தளிப்புக்கு உள்ளாக்கியுள்ள அதிர்ச்சிகரமான அரசாங்க நடவடிக்கையால் பாதிக்கப் படாதவர்கள் இருக்க முடியாது. சென்ற நவம்பர் 8 ஆம் தேதி 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று பிரதமர் அறிவித்தது முதல் நாடு முழுக்க மக்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். பாமர மக்கள் அனைவருக்கும் தாங்கள் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதித்து சேமித்த பணத்தை திடீரென யாரோ ஒரு கொள்ளையன் வந்து சுத்தமாக கொள்ளையடித்துவிட்டுச் சென்றது போன்ற உணர்வு உண்டாகி உள்ளது. வங்கி வாசல்கள் முன் நிற்கும் நீண்ட வரிசைகள், உணவும் நீரும் இல்லாமல் தங்கள் உழைத்து சேமித்த பணத்தை எடுப்பதற்காக தொழிலையும் வியாபாரத்தையும் முடக்கி வைத்து காத்திருக்கும் பாமரர்கள், பணப்புழக்கத்தின் திடீர் குறைவு காரணமாக முடங்கிக் கிடக்கும் வணிக நிறுவனங்கள், வேலைவாய்ப்புகள், வரிசைகளில் காத்திருந்தும் அவசரத் தேவைகளுக்கு பணம் இல்லாமையாலும் இறப்பெய்துவோரின் ஏறுமுகமாக நிற்கும் எண்ணிக்கை என நாடே அல்லோலகல்லோலப் பட்டு நிற்பதை அறிவோம். நாடாள்வோரின் கட்டுப்பாட்டில் நிற்கும் ஒருதலைப்பட்சமான ஊடகங்களும் நாடாள்வோரின் ஆதரவாளர்களும் நாடுமுழுக்க ஏற்பட்டிருக்கும் மக்களின் கொந்தளிப்பை மூடிமறைக்கவும் மூளைச்சலவை செய்யவும் கடும் முயற்சிகள் மேற்கொண்டாலும் பிரச்சினை மக்கள் நேரடியாக அனுபவிக்கும் ஒன்று என்பதால் அவை தோல்வியையே அடைகின்றன.

## சமூகப் பொறுப்பற்ற நடவடிக்கை

மக்கள் அன்றாட உழைப்புக்கு கூலியாகவும் தங்களிடம் உள்ள உடமைகளை அல்லது உற்பத்திப்பொருட்களை அல்லது சேவைகளை பிறருக்கு விற்கவும் அல்லது வாங்கவும் என அன்றாட வாழ்வின் அனைத்துத் தேவைகளுக்கும் இந்த ரூபாய் நோட்டுகளைத்தான் சார்ந்திருக்கின்றனர். சமூகத்தின் மூச்சுக் காற்று போன்று விளங்கும் இந்த பணத்தாள்களை திடீரென செல்லாக்காசாக அறிவித்த செயல் இன்றைய ஆட்சியாளர்களுக்கு சற்றும் மனிதநேயம் என்பது கிடையாது என்பதை நமக்கு உணர்த்தி நிற்கிறது. சமூகத்தில் அன்றாடங்காய்ச்சிகள் முதல் வியாபாரிகள், தொழில் முனைவோர் இல்லத்தரசிகள் என அனைவரையும் நடுத்தெருவுக்கு கொண்டுவந்து சீரழிய வைக்கும் இந்த செயலுக்குரியவர்கள் யாராயினும் அவர்களின் இந்த பொறுப்பற்ற செயலுக்காக இறைவனால் தண்டிக்கப் படுவார்கள் என்பதை இறைவனின் இறுதித்தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிச் சென்றுள்ளார்கள்::

- உங்களில் ஒவ்வொருவருக்கும் பொறுப்பாளியே. நீங்கள் ஒவ்வொருவருக்கும் (அவரவர் பொறுப்பு குறித்து மறுமையில்) விசாரிக்கப்படுவீர்கள்: ஆட்சித்தலைவரும் பொறுப்பாளரே. அவர் (தம் குடிமக்கள் குறித்து) விசாரிக்கப்படுவார்ர். ஆண்மகன் (-குடும்பத்தலைவன்-) தன் மனைவி மக்களின் பொறுப்புக்கு உட்பட்டவர்கள் பற்றி) விசாரிக்கப்படுவான். பெண் (-மனைவி-), தன் கணவரின் வீட்டிற்குப் பொறுப்பாளியாவாள். அவள் (அந்தப் பொறுப்பு குறித்து) விசாரிக்கப்படுவாள். அடிமை தன் எசமானின் செல்வத்திற்குப் பொறுப்பாளியாவான். அவன் (தனக்குரிய பொறுப்பு குறித்து) விசாரிக்கப்படுவான். அறிந்துகொள்ளுங்கள்! நீங்கள் ஒவ்வொருவரும்

பொறுப்பாளியே. உங்களில் ஒவ்வொருவரும் விசாரிக்கப்படுவீர்கள்.

அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) (நூல்: புகாரி 5188)

**ரூபாய் நோட்டுகளின் உண்மை நிலை**

உண்மையில் இந்த ரூபாய் நோட்டுகள் என்பவை என்ன? சாதாரணக் காகிதத் துண்டுகளுக்கு இல்லாத என்ன சிறப்பு இவற்றிற்கு உள்ளது?

ஆம், இவை ஒவ்வொன்றும் உங்கள் உழைப்புக்கும் சேவைகளுக்கும் உடமைகளுக்கும் பொருட்களுக்கும் பகரமாக அவற்றின் மதிப்பிற்கேற்ப வழங்கப்படும் உத்தரவாத பத்திரங்கள் போன்றவையாகும். ஒரு குறிப்பிட்ட பொருளை ஒரு நிறுவனத்தில் அடகு வைத்தால் அந்நிறுவனம் வழங்கும் சட்டபூர்வமான ரசீது போன்றவையே இந்த பணத்தாள்கள். இந்தியாவின் தலைமை வங்கியான இந்திய ரிசர்வ் வங்கியால் வெளியிடப்படும் நாணயங்களும் பணத்தாள்களும் குறிப்பிட்ட சட்டங்களுக்கு உட்பட்டு வெளியிடப் படுகின்றன.

நாணயங்களை வெளியிடுவதற்கு The Coinage Act 1906 என்று ஒரு சட்டம் உள்ளது. The Paper Currency Act 1861 படி ரூபாய் தாள்களில் கரன்சிகள் வெளியிடப்படுகின்றன. 1935 இல் RBI துவங்கப்பட்டு, 1938இல் முதலில் ஐந்து ரூபாய் தாள்களும் அதன் பிறகு அதிக மதிப்புடைய ரூபாய் தாள்களும் வெளியிடப்பட்டன. பிரிட்டிஷ் இந்தியாவில் வெளியிடப்பட்ட ரூபாய் தாள்கள் மன்னர் ஜார்ஜ் IV படத்தை கொண்டிருந்தன, சுதந்திர இந்தியாவில் வெளியிடப்பட்ட ரூபாய்த் தாள்கள் முதலில் அசோக ஸ்தூபியையும், பின்னர் மகாத்மா காந்தி படத்தையும் கொண்டு வெளியிடப்பட்டன.

இவ்வாறு மக்கள் ஆணித்தரமான நம்பிக்கை வைத்து இந்த பணத்தாள்களைக் கொண்டு புழங்கிக் கொண்டு இருக்கும்போது திடீரென அவை செல்லாது என்று வங்கியால் அறிவிக்கப்பட்டால் என்ன பொருள்? அதற்கு நம்மை ஆள்பவர்கள் கூறும் காரணமான கறுப்புப்பண ஒழிப்பு என்பது உண்மைதானா?

நமக்கு வங்கிகள் மூலம் வழங்கப் பட்டுள்ள இந்த பத்திரங்களின் மதிப்பிற்குரிய - அதாவது தங்கம் அல்லது வெள்ளி போன்ற - அடகுப்பொருள் என்ற ஒன்று எது? அது எங்கே பாதுகாக்கப் படுகிறது? நாம் நம்பி கைவசம் வைத்துள்ள இந்த வாக்குறுதிப் பத்திரங்கள் செல்லாது என்றால் அதன் உண்மையான பொருள் என்ன?

அடகுப் பொருள் காணாமல் போய்விடுகிறதா? அல்லது களவாடப்பட்டு விடுகிறதா? அல்லது அடகுப் பொருள் என்று எதுவுமே இல்லாமல் வெற்றுக் காகிதம் கொடுத்து நாம் ஏமாற்றப்பட்டு உள்ளோமா? ஆள்பவர்கள் நமக்கு நம்பிக்கை துரோகம் செய்கிறார்களா?

நாம் உண்மையில் பொறுப்புள்ள குடிமக்கள் என்றால் நமக்கு இந்த சந்தேகங்கள் எழ வேண்டும். இந்த சந்தேகங்களுக்கான விடைகளையும் கண்டறிந்து ஆவன செய்வது நாட்டுநலனில் அக்கறை கொண்ட அனைவர் மீதும் கடமையாகிறது.

# சோதனைகளும் நன்மைக்கே!


● இறைவன் கூறுகிறான் : நான் என் அடியானை, அவனுக்கு விருப்பமான இரு பொருட்களை (கண்களைப் பறித்து)க் கொண்டு சோதித்து, அவன் அதைப் பொறுத்துக் கொண்டால், அவற்றுக்குப் பதிலாக சொர்க்கத்தை நான் அவனுக்கு வழங்குவேன். (நூல் : புகாரி 5653)

# காகிதப்பணம் வந்த கதை

பண்டைக்காலத்தில் பண்டமாற்று சந்தைகளில் வியாபாரம் நடந்து வந்தது. அதாவது வாரம் ஒருமுறை ஊரில் ஆங்காங்கே கூடும் சந்தைகளில் மக்கள் அவரவர் விளைச்சல்களை அல்லது பொருட்களை கொண்டுவந்து தங்களுக்கு தேவையான பொருளை தேடிக் கண்டுபிடித்து அவற்றோடு பரிமாறிக் கொண்டார்கள். இம்முறையில் உண்டான சிரமங்களை நீக்கும் வண்ணம் போகப்போக தங்கக் காசுகள் புழக்கத்திற்கு வந்தன.



தங்கக் காசுகள் திருட்டுக்கும் கொள்ளைக்கும் பறிபோவதைத் தடுக்க இயலாமல் போயின. அவற்றின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து இவற்றால் மக்கள் சிரமங்களுக்கு உள்ளானார்கள். அதைத் தொடர்ந்து தங்க நாணயங்களின் பாதுகாப்பை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று சில செல்வந்தர்கள் முன்வந்து பெரும் பாதுகாப்புப் பெட்டகங்களை நிறுவி மக்களிடம் இருந்த தங்கத்தை பெற்று அவற்றுக்கான ரசீதுப் பத்திரங்களை வழங்கினார்கள். அவற்றைத் திருப்பிக் கொடுக்கும்போது அதற்கான சேவைக் கட்டணங்களையும் வசூலித்தார்கள்.



பிற்காலங்களில் மக்கள் அந்த பத்திரங்களையே தங்க நாணயங்கள் போல் வியாபாரங்களில் பரிமாறும் பழக்கத்திற்கு மாறினார்கள். இந்தப் பழக்கம் பிரபலமாக ஆக மக்கள் பெட்டகக்காரர்களிடம் நம்பிக்கையோடு கொடுத்திருந்த தங்க நாணயங்களில் பெரும்பாலானவை திரும்பப் பெறாமல் பெட்டகங்களிலேயே உறங்கின.

இதை கவனித்த பெட்டகக்காரர்கள் ஒரு பெரும் சதித்திட்டம் தீட்டினார்கள். ‘நம் பெட்டகங்களில் உறங்கும் இந்த நாணயங்களை நாம் ஏன் இரகசியமாகக் மக்களுக்கு கடன் கொடுக்கக்கூடாது? அனைவரும் ஒன்றாக ஒரே நேரத்தில் வந்து தங்கள் நாணயங்களைத் திருப்பக் கேட்பதற்கான வாய்ப்புகள் இல்லை. அதனால் நாம் தாராளமாகக் கடன் கொடுத்து வட்டியை ஈட்டலாமே.” என்று தங்கள் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கைத்துரோகம் செய்ய முடிவெடுத்து அதை செயல்படுத்தினார்கள்.




என்ன நடந்தது?.... அவ்வாறு கடன் பெற்றவர்களும் தங்க

நாணயங்களை வாங்கிச் செல்வதை விட பெட்டகக் காரர்களின் பத்திரங்களையே விரும்பி வாங்கிச் சென்றார்கள். அவ்வாறு கொடுத்த பத்திரங்களைத் திரும்பப் பெறும்போது வட்டியும் வசூலித்தார்கள்.

**வருமானத்தை ஈட்டும் வெற்றுக் காகிதம்**

இப்போது பெட்டகக் காரர்களுக்கு மகிழ்ச்சிக்கு மேல் மகிழ்ச்சி! தாங்கள் வழங்கும் பத்திரங்கள் மக்களால் கேள்வி கேட்கப்படாமல் கைமாறப்படும் நிலையைக் கண்ட பெட்டகக்காரர்கள் தங்கள் இச்சை போல பத்திரங்களை அச்சடித்து அதை விநியோகித்தார்கள். வட்டியும் வட்டிக்குமேல் வட்டியும் எல்லாம் வசூலித்தார்கள். மட்டுமல்ல, அதைக் கொண்டு தாங்கள் விரும்புவதை வாங்கிக் குவித்தார்கள், நினைத்ததை நடத்தினார்கள்... சமூகத்தின் மீது அசைக்கமுடியாத அதிகாரத்தைப் பெற்றார்கள்! ஆம், அந்த பத்திரங்களின் பரிணாமமே இன்று உங்கள் கைகளில் புழங்கும் பணத்தாள்கள்(currency)! அந்தப் பெட்டகங்களின் பரிணாமமே வங்கிகள்!

# நம்மை அடிமைப்படுத்தி வைத்திருப்பது யார்?

சற்று யோசித்துப் பாருங்கள்... நம்மில் ஒவ்வொருவரிடமும் பொருட்களும் உள்ளன சேவைகளும் உள்ளன. அவற்றை நமக்குள் பரிமாறிக்கொள்ள ஒரு முறையான அமைப்பு (system of governance) தேவை. அது அரசு சார்ந்ததாக ஆனால் நம்மைச் சுரண்டாததாக இருக்கும் வரை நமக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் தற்போது நாம் சிக்கிக்கொண்டுள்ள அமைப்பு நம்மை ஏமாற்றி பாழும் கிணற்றில் தள்ளிவிடுமானால் அதை ஆராய்ந்து நம்மைத் தற்காத்துக்கொள்ள முயலவேண்டும்.

மேற்கூறப்பட்ட பணம் வந்த கதையில் இருந்து நாம் யாரால் அடிமைப்படுத்தப் பட்டிருக்கிறோம் என்பதை உங்களால் ஊகிக்க முடியும்! மனித வரலாற்றில் நாணயங்களும் வங்கி முறைகளும் முன்பே இருந்திருக்கின்றன. ஆனால் இன்று நாம் வாழும் உலகை கையகப்படுத்தி நம்மையெல்லாம் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் வங்கி அமைப்பைப் பற்றி மட்டும் தற்போது கவனிப்போம்.

தங்க நாணயங்களின் பாதுகாப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று கூறி பாதுகாப்புப் பெட்டகங்களை நிறுவிய வங்கியாளர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட தங்க நாணயங்களுக்கு ரசீதுகளைக் கொடுத்தார்கள். தங்கள் சேவைக்கு கட்டணமும் வசூலித்தார்கள். நாள் செல்லச்செல்ல மக்கள் அந்த ரசீதுகளையே நாணயங்களுக்கு பதிலாக உபயோகித்து வியாபாரம் செய்தார்கள்.

நீண்ட காலமாக தங்களிடம் உறங்கிக் கிடக்கும் தங்க நாணயங்களை வங்கியாளர்கள் மறைமுகமாக மற்றவர்களுக்கு கடனாகக் கொடுத்து வட்டியும் ஈட்ட ஆரம்பித்தார்கள். அவ்வாறு கடன் பெற்றவர்களும் தங்க நாணயங்களை வாங்கிச் செல்வதை விட வங்கியாளர்களின் ரசீதுகளியே விரும்பி வாங்கிச் சென்றார்கள்.

தாங்கள் கையெழுத்திட்டு வழங்கும் ரசீதுகள் மக்களால் கேள்வி கேட்கப்படாமல் கைமாறப்படும் நிலையைக் கண்ட வங்கியாளர்களுக்கு அது அலாதியான தைரியத்தை கொடுத்தது. தங்கள் இச்சை போல விரும்பிய மதிப்புக்கு விரும்பிய எண்ணிக்கையில் அச்சடித்து அதை விநியோகித்தார்கள். வட்டியும் வட்டிக்குமேல் வட்டியும் எல்லாம் வசூலித்தார்கள். மட்டுமல்ல, அதைக் கொண்டு தாங்கள் விரும்புவதை

வாங்கிக் குவித்தார்கள். சமூகத்தில் மற்றவர் அனைவரையும் அடிமையாக்கும் அந்தஸ்திற்கு உயர்ந்தார்கள். இவர்களால் அந்நாட்டு அரசனையும் அடிமையாக்க முடியாதா? யோசித்துப்பாருங்கள்.

ஒரு நாட்டில் - அதுவும் ஒரு மிகப்பெரிய வல்லரசு நாட்டில் - உள்ள வங்கி உரிமையாளர்கள் கூட்டணி அமைத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட கரன்சியை அச்சடித்து அரசின் அங்கீகாரத்தோடு அதைப் புழக்கத்தில் விட்டு அதைக்கொண்டே அந்நாட்டில் கொடுக்கல் வாங்கல் நடைபெறுகிறது என்றால் என்ன நடக்கும் என்பதை யோசித்துப்பாருங்கள். அவர்களால் நாட்டில் உள்ள எதைத்தான் வாங்கமுடியாது. அரசாங்கமும் ரவுடிகளும் இந்தத் தனியார் முதலாளிகளுக்கு துணையாக இருந்தால் அவர்களால் செய்யமுடியாதது ஏதும் இருக்குமா?

இதே சதித் திட்டத்தை உலக அளவில் செய்தால்... ?

ஆம், டாலர் என்ற வெற்றுக்காகிதத்திற்கு முன் பெட்டிப்பாம்பாக உலகம் கட்டுண்டு கிடப்பது அதனால்தான்!

## பெடரல் ரிசர்வ் வங்கியும் டாலரும்

இந்த வங்கி உரிமையாளர்களின் வஞ்சகச் செயலுக்கு வல்லரசு அரசாங்கமும் வலிமையான ஊடகங்களும் உலக மா∴பியாவும் (ரவுடிகளும்) துணையாக இருந்தால் என்ன நடக்கும்? அவர்களால் எதைத்தான் செய்ய முடியாது? உலகில் எதைத்தான் அல்லது யாரைத்தான் வாங்க முடியாது? உலகிலேயே மிக சக்தி வாய்ந்த பணத்தைத் 'தயாரிப்பவர்கள்' தாங்கள் தயாரிக்கும் பணத்தைக்கொண்டு உலகின் எந்த மூலையில் உள்ள சொத்துக்களையும் நிறுவனங்களையும் தொழிற்சாலைகளையும் வணிக அமைப்புகளையும் அவற்றின் பெரும்பான்மை பங்குகளை வாங்குவதன் மூலம் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முடியாதா ? அதற்குப் பணியாதவர்களை பணிய வைக்க அந்தந்த நாட்டு அரசாங்கங்களும் மா∴பியாக் கும்பல்களும் துணையிருக்கும்போது அவர்களுக்கு என்ன தடை?

அந்த வகையில் இன்று உலகின் எண்ணெய்க் கிணறுகள், நிலத்தடி வளங்கள், விளைபொருட்கள், இயற்கைவளங்கள், உலக வளங்களை தோண்டி எடுக்கும் நிறுவனங்கள், நுகர்வுப்பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலைகள், விற்கும் வாங்கும் பெரும்பெரும் வணிக அமைப்புகள், ஆயுதங்கள், இராணுவத் தளவாடங்கள், விமானங்கள், கப்பல்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், மருந்துக் கம்பெனிகள், பத்திரிகைகள், டிவிக்கள், என உலகின் எங்கெல்லாம் எதிலெல்லாம் கொழுத்த வருமானம் வருமோ அவற்றில் பெரும்பாலானவை ஒரு பதிமூன்று யூத இனத்தைச் சார்ந்த குடும்பங்களின் வம்சாவளியினரின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளன. பணம், ஆயுதம், அரசாங்கம், ஊடகம், பயங்கரவாதம், இவை அனைத்தும் ஒரே கைகளில் ஒன்று சேருமானால் அதை மிஞ்சும் சக்தி எதுவும் உலகில் இருக்க முடியுமா?




## பெடரல் ரிசர்வ் வங்கியின் உருவாக்கம்

இன்று அகில உலகத்தில் உள்ள அனைத்து வங்கிகளையும் தனது கட்டுக்குள் அடக்கிவைத்து நிர்வகித்து வரும் வங்கி அமெரிக்காவில் உள்ள பெடரல் ரிசர்வ் வங்கி. 1910ம் ஆண்டு அமெரிக்காவின் ஜெக்கிள் தீவில் (Jekyll Island)

ரோத்ச்சைல்டு, ராக.்.பெல்லர், ஜே.பி.மோர்கன் ஆகிய மூன்று யூத வங்கி முதலாளிகள் அன்றிருந்த மற்ற வங்கி முதலாளிகள் சிலரோடு ரகசியமாக சந்தித்தார்கள். சட்டவிரோதமாக தாங்கள் சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் பாதுகாப்பதற்கும், அந்தப் பணத்தை கொண்டு மேலும் மேலும் கொள்ளை லாபம் அடிப்பதற்கும் ஒரு பெரும் வங்கி உருவாக்குவதென முடிவு செய்தார்கள். அதற்கு அன்றைய அமெரிக்க ஜனாதிபதியான உட்ரோ வில்சனை வஞ்சகமாக நிர்ப்பந்தித்து அரசின் ஒப்புதலோடு உருவாக்கப்பட்டதுதான் அமெரிக்காவில் இருக்கும் பெடரல் ரிசர்வ் வங்கி. இந்த தனியார் வங்கி அச்சடித்து வெளியிடுவதுதான் டாலர் என்னும் உலகின் மிக சக்தி வாய்ந்த காகிதப்பணம்!



அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு முரணாக, அந்நாட்டின் நிதி கட்டமைப்பையும், புதிதாக ஒரு நாணயத்தை உருவாக்கும் பொறுப்பையும் தனியார்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த வங்கியிடம் அளித்தது அமெரிக்க நாடாளுமன்றம். முற்றிலும் சட்டவிரோதமாக உதயமான பெடரல் ரிசர்வ், பிற்காலத்தில் அனைத்து சட்டங்களையும் தீர்மானிக்கின்ற சக்தி கொண்டதாக மாறியது. இன்று உலகவங்கி, இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் உலகில் உள்ள அனைத்து நாடுகளின் தலைமை வங்கிகளும் இதன் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

ஆக, மேலே கூறப்பட்ட 13 யூத குடும்பங்களின் வம்சாவளியினரின் கூட்டமைப்பின் கைகளால்தான் உலகத்தின் மொத்த பொருளாதாரமும், உலக நாடுகளின் வளங்களும், நிறுவனங்களும் ஊடகங்களும் கட்டுப்படுத்தப் படுகின்றன. இவர்கள் தங்கள் அடங்காத பொருளாசையை நிறைவேற்றும் பொருட்டு எதையும் செய்யத் துணிகிறார்கள். உலக அரசியலை தம் விருப்பப்படி நடத்துகிறார்கள். தங்கள் ஆதிக்கத்தையும் உலக நாடுகளின் அதிபர்களும் தலைவர்களும் இவர்களின் ஆணைப்படியே நியமிக்கப் படுகிறார்கள். நாடுகளுக்கு இடையேயான வியாபாரங்கள் கட்டாயமாக டாலரில்தான் நடத்தப்பட வேண்டும்.

### எதிர்ப்போரை இல்லாமல் ஆக்குதல்

இதற்கு ஒப்புக்கொள்ள மறுக்கும் தலைவர்கள் போர்கள் மூலமும் உள்நாட்டுக் கலவரங்கள் மூலமும் அப்புறப்படுத்தப் படுகிறார்கள் அல்லது கொல்லப்படுகிறார்கள். உதாரணம் சத்தாம் ஹுசைன், கத்தா.்.பி போன்றோர். லிபியாவின் கடா.்.பி அவர்கள் கொல்லப்பட்டதற்கு முக்கிய காரணம் அவர் பெற்றோலியத்தை டாலருக்கு விற்க மறுத்தார் என்பதும் தங்கத்தை அடிப்படையாகக்கொண்ட ஆப்ரிக்க நாட்டுக் கரன்சியை உருவாக்க முயன்றார் என்பதும்தான். இவை சமீபத்தில் விக்கிலீக்ஸ மூலம் கசிந்த ஹில்லாரி கிளிண்டன் இமெயில்கள் மூலம் உலகுக்கு தெரியவந்த விடயங்கள் ஆகும்.

# சோதனைகளும் நன்மைக்கே!

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

● ஒரு முஸ்லிமைத் தைக்கும் முள் உள்பட அவருக்கு நேரிடும் துன்பம், நோய், துக்கம், கவலை, தொல்லை, மனவேதனை ஆகிய எதுவாயினும் அதற்குப் பதிலாக அவருடைய பாவங்களிலிருந்து சிலவற்றை அல்லாஹ் மன்னிக்காமல் இருப்பதில்லை. (நூல் : புகாரி 5642)

# வஞ்சக வலைக்கெதிராக இஸ்லாம்

தாங்கள் அச்சடிக்கும் டாலர் என்ற மதிப்பற்ற வெற்றுக் காகிதத்தை தந்திரபூர்வமாக உலகெங்கும் திணித்து தங்களின் அடக்குமுறை மூலம் உலக நாடுகளையும் அவற்றின் வளங்களையும் தங்களது ஆதிக்கத்தின் கொண்டுவந்துள்ள இரகசிய சமுதாயம்தான் இன்று அமேரிக்காவையும் அதன் கூட்டாளிகளையும் இயக்கி வருகின்றது. அமெரிக்காவை தலைமையகமாகக் கொண்டே இவர்கள் செயல்பாடுகள் அமைந்திருப்பதைக் காணமுடியும்.



● உலகின் அனைத்து நாடுகளின் தலைமை வங்கிகளும் இவர்களின் கட்டுப்பாட்டுக்குக் கீழேதான் உள்ளன. இணையத்தில் இதற்கான ஆதாரங்களை நீங்கள் காணலாம் (The Rothschild-Owned Central Banks of the World. https://shar.es/1IU7u4) அந்த வகையில் நமது இந்திய ரிசர்வ் வங்கி Reserve Bank of India, Bank Indonesia, Central Bank of Nigeria, Central Bank of Norway, Central Bank of Oman, State Bank of Pakistan இவற்றை ஒரு சில உதாரணங்களாக கூறலாம்.

● இவர்கள் உலகத்திலுள்ள கொழுத்த வருமானங்கள் ஈட்டும் அனைத்து வியாபார, உற்பத்தி, போக்குவரத்து, பொழுதுபோக்கு (entertainment), கட்டுமான (infrastructure), நிறுவனங்களையும் அவற்றின் பெரும்பான்மை பங்குகளை வாங்குவதன் மூலமும் தங்களின் ஆளுகைக்குக் கீழ் கொண்டுவந்துள்ளார்கள். மருத்துவம், கல்வி, மதம் இவையும் வருமானங்கள் கொழிக்கும் துறைகளல்லவா? ஆம், இவற்றையும் இவர்கள் விட்டுவைக்கவில்லை! இவற்றையும் இவர்கள் தங்களின் திட்டங்களின் மூலமும் கையாட்கள் மூலமாகவும் திறம்பட நிர்வகித்து வருகிறார்கள்.



● ஆயுத உற்பத்தி இவர்களின் மிக முக்கியமான துறை. உலகிலேயே அதிநவீன தொழில்நுட்பம் வாய்ந்த விமானங்கள், ஏவுகணைகள், நீர்மூழ்கிக் கப்பல்கள். அணுவாயுதங்கள் மற்றும் இன்னபிற இராணுவத் தளவாடங்கள் இவர்களின் கைவசம் இருப்பதால் உலகநாடுகள் அனைத்தையும் இவர்களால் அச்சுறுத்தி தங்களின் அடிமைகளாக அடக்கிவைக்க முடிகிறது. ஆயுதங்களை உலக சந்தையில் விற்பனை செய்ய வேண்டும் என்பதற்காக சிறு சிறு நாடுகளுக்கு இடையே பகைமையை மூட்டி ஒருவருக்கொருவரை அடித்துக் கொள்ள வைப்பது அல்லது நாடுகளுக்குள்ளேயே சிறுசிறு குழுக்களைத் தூண்டி அந்நாட்டு அரசுகளுக்கு எதிராக கிளர்ச்சி செய்யத் தூண்டுதல் போன்றவை இவர்களுக்கு வாடிக்கை.

● அமெரிக்கா உட்பட உலக நாடுகளை யார் ஆளவேண்டும் என்பதை இவர்களே தீர்மானிப்பவர்களாக உள்ளனர். உலகெங்கும் ஆங்காங்கே உள்ள இவர்களின் கம்பெனிகளும் நிறுவனங்களும் அடியாட்களும் அந்தந்த நாட்டு வளங்களை சுரண்டும் அல்லது உறிஞ்சிஎடுக்கும் பணிக்கு எந்த பாதிப்பும் வராத வகையில் ஆட்சியாளர்கள் அமைந்தால் அல்லவா இவர்களின் ”சேவைகளைத்” தொடர முடியும்?

● அரசர்கள் அல்லது சுல்தான்களால் ஆளப்படும் நாடுகளில் அவர்கள் நேரடியாக தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். தேர்தல் மூலம் ஆள்பவர்கள் தேர்ந்தெடுக்கப் படும் இடங்களில் தங்களால் இயன்ற அளவு இருகட்சி அமைப்பை (Two party system) கொண்டுவர முயற்சி செய்கிறார்கள். யார் ஆட்சிக்கு வந்தாலும் இவர்களின் கைப்பாவையாக இருக்கும்படி பார்த்துக் கொள்கிறார்கள். அதற்காக தங்கள் கைவசம் உள்ள செல்வங்களையும் ஊடகங்களையும் அடியாட்களையும் உள்ளூர் இயக்கங்களையும் சமூக வலைத்தளங்களையும் எல்லாம் தாராளமாக பயன்படுத்துகிறார்கள்.

நம் நாட்டைப் பொறுத்தவரையில் தேசிய வளங்கள் மட்டுமல்ல, மாநில வளங்களும் இவர்கள் இலக்கில் உள்ளவை. எனவே மாநிலத் தலைமையும் இவர்களின் கைப்பாவைகளிடம் அமையுமாறு பார்த்துக் கொள்கிறார்கள். அதற்கேற்றவாறு காய்கள் நகர்த்தலும் நாடகங்களும் நிகழ்கின்றன. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் இவர்களின் கட்டுப்பாட்டில் இல்லாமல் இல்லை!



● இவர்கள் முக்கியமாக மிகவும் கவனத்தோடு நிர்வகித்து வருவது ஊடகத்துறை. உலகில் உள்ள தலையாய பத்திரிகைகள், தொலைகாட்சி சேனல்கள், ஊடக ஏஜென்சிகள் போன்றவை இவர்கள் கைவசமே உள்ளன. இவர்கள் சொல்வதை உலகின் பெரும்பான்மை மக்கள் நம்பும் விதத்தில் இவர்கள் இவற்றைக் கையாள்கிறார்கள். நடக்காத ஒன்றை நடந்ததாகவும் நடந்ததை நடக்காததாகவும் இவர்களால் காட்ட முடியும். அமெரிக்காவின் இரட்டை கோபுர இடிப்பு சம்பவத்தை ஒசாமா பின் லாடனும் கூட்டாளிகளும் நிகழ்த்தினார்கள் என்று உலகை நம்ப வைத்ததை இதற்கு உதாரணமாகக் கூறலாம். கோபுரங்களை விமானம் மூலம் இடித்து வீழ்த்துவது அசாத்தியம் என்பதும் கட்டிடங்கள் டைனமைட் வைத்துத்தான் (implosion) தகர்க்கப்பட்டு உள்ளன என்பதும் இது அமெரிக்காவின் உள்வேலை(inside job) என்பதும் இன்று ஆய்வுகள் வெளிப்படுத்தும் உண்மைகள். இச்சம்பவத்தின் மூலம் இராக்கையும் ஆப்கானிஸ்தானையும் தங்கள் ஆளுகைக்குக் கீழ் கொண்டு வந்துள்ளதில் இருந்தே இவர்களின் நோக்கம் என்ன என்பதை யாரும் அறியமுடியும்.

● இலட்சக்கணக்கில் மனித உயிர்கள் மாய்வது இவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. தங்கள் ஆயுத விற்பனையும் வருமானமும் ஆதிக்கமும் தடைபெறக் கூடாது என்பதற்காக ஒருபுறம் இராணுவ அடக்குமுறைகளையும் மறுபுறம் தங்கள் கைவசம் உள்ள பத்திரிகை, டிவி, ரேடியோ போன்ற

ஊடகங்களையும் தந்திரமான முறையில் கையாள்கிறார்கள். மக்களை மூளைச்சலவை செய்து தங்கள் அராஜகங்களை நியாயப்படுத்துகிறார்கள். தங்களை சமாதானப் பிரியர்களாகவும் இவர்களின் எதிரிகளை பயங்கரவாதிகளாகவும் சித்தரிக்கிறார்கள். மக்கள் அதை நம்பவும் செய்கிறார்கள்! காரணம்.. உலக ஊடகங்களில் பெரும்பாலானவை இவர்களால் வாங்கப் பட்டவையே!

இவர்கள் நடத்தும் உலகளாவிய கொள்ளையையும் கொடூரங்களையும் தட்டிக்கேட்கவும் தடுக்கவும் முன்வந்த அனைத்து மக்கள் சக்திகளும் இந்த வஞ்சகர்களால் நிர்மூலம் செய்யப்பட்டன அல்லது கலைக்கப்பட்டன அல்லது பிரித்தாளப்பட்டன! (உதாரணம்: ரஷ்யாவின் தலைமையில் ஆன கம்யூனிச நாடுகளின் கூட்டமைப்பு)

### ஒரே ஒரு நம்பிக்கை ஒளி

ஆனால் ஒரே ஒரு சக்தி மட்டும் இக்கொள்ளையர்களுக்கு கட்டுக்கடங்காத சவாலாக இருந்து வருகிறது. சக்திவாய்ந்த சதிவலைகளுக்கும் மிரட்டல்களுக்கும் பிரித்தாளும் சூழ்ச்சிகளுக்கும் அடிபணியாமல் தன் வெற்றிப்பயணத்தை சளைக்காமல் தொடர்கிறது அது! உலகில் அநியாயங்களை அழித்தே தீருவேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறது!

அது இடம், நாடு, மொழி அல்லது இனம் சார்ந்ததல்ல, மாறாக மனம் சார்ந்தது! மனித மனங்களை சீர்திருத்தி அவர்களைக் கொண்டே அநியாயங்களுக்கு முடிவுரை எழுத உள்ளது! ஆம், அதுதான் இஸ்லாம் என்ற மக்கள் சக்தி! எந்த மக்களை அல்லது சமூகங்களை ஆட்கொள்கிறதோ அவர்களை சீர்திருத்தி அவர்களையே உலகில் நடக்கும் அநியாயங்களுக்கும் தீமைகளுக்கும் எதிராக முன்னிறுத்துகிறது இந்த சீர்திருத்த சித்தாந்தம்! இந்த இயக்கத்தில் இணைந்து இவர்களின் சதித் திட்டங்களுக்கு எதிராகப் போராடுவோரைத்தான் இவர்களது ஊடகங்கள் பயங்கரவாதிகளாக சித்தரிக்கின்றன.

இவ்வுலகைப் படைத்தவனே வகுத்து வழங்கும் இந்த சீர்திருத்தக் கொள்கை கண்டிப்பாக வெல்லும் என்பதற்கும் பூமியில் அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலைநாட்டும் என்பதற்கும் அவனே தனது திருமறை மூலம் உத்தரவாதம் வழங்குகிறான்:

- **'தம் வாய்களைக் கொண்டே இறைவனின் ஒளியை (ஊதி) அணைத்துவிட அவர்கள் விரும்புகின்றார்கள் [redacted] ஆனால் இறைமறுப்பாளர்கள் வெறுத்த போதிலும் இறைவனின் தன் ஒளியை பூர்த்தியாக்கி வைக்காமல் இருக்க மாட்டான்.' (அல்-குர்ஆன் 9:32)**

# செல்வமும் வறுமையும் இறைநாட்டமே

- **தான் நாடியோருக்கு உமது இறைவன் செல்வத்தைத் தாராளமாக வழங்குகிறான். குறைத்தும் வழங்குகிறான். அவன் தனது அடியார்களை நன்கறிந்தவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கிறான். (திருக்குர்ஆன் 17:30)**

- **தான் நாடியோருக்குச் செல்வத்தை அல்லாஹ் தாராளமாகவும், குறைத்தும் வழங்குகிறான் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? நம்பிக்கை கொள்ளும் சமுதாயத்துக்கு இதில் பல சான்றுகள் உள்ளன. (திருக்குர்ஆன் 30:37)**

# என்று பெறுவோம் விடுதலை?

நீங்கள் வியர்வை சிந்த உழைத்து சம்பாதித்த பொருளை நீங்கள் அனுபவிக்க வேண்டுமானால் இரண்டு அரக்கர்களுக்கு நீங்கள் கப்பம் கட்டியாக வேண்டும். ஒன்று வட்டி ஈட்டும் வங்கிகள். இரண்டு அரசாங்கத்தின் வரி இலாக்கா.



உலக நாடுகளின் அனைத்து தலைமை வங்கிகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்து உலக வளங்களை சுரண்டிக்கொண்டிருக்கும் இரகசிய யூத சமூதாயத்தின் தீராத பொருள் வேட்கைக்கு நம்நாடும் பலியாகிக் கொண்டிருக்கிறது என்பதை சிந்திப்போர் உணர முடியும். கருப்புப்பண ஒழிப்பு என்ற பெயரில் 500 / 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அரசாங்கத்தின் திடீர் நடவடிக்கையும் அவர்களின் சதியே என்பதை நீங்கள் சிந்தித்தால் அறியலாம்.

பண்ட மாற்று முறையில் நடந்துவந்த வணிகம் தங்கம் அல்லது வெள்ளி நாணய பரிமாற்ற முறையில் நடந்தவரை இடைத்தரகர் ஆதிக்கம் இன்றி நேர்மையாக நடந்துவந்தது எனலாம். ஆனால் எப்போது தங்கத்தின் பாதுகாப்பு கருதி வங்கிகளை மக்கள் அணுகி அவர்கள் தந்த ரசீதுகளைப் பரிமாறிக் கொண்டு வியாபாரம் செய்ய ஆரம்பித்தார்களோ அப்போதிருந்து அந்த வங்கியாளர்களின் சூழ்ச்சிகளுக்கு ஆளானார்கள்.

தங்களின் கையொப்பமிட்ட ரசீதுகள் மக்களிடையே மதிப்பு ஒன்றாக வாய்ந்த மாறியபோது வங்கியாளர்கள் வெற்று ரசீதுகளை அச்சிட்டு அதை வட்டிக்குக் கொடுத்து வருவாய்களை ஈட்டினார்கள். அதன்மூலம் நாட்டு வளங்களை வாங்கிக் குவித்த அவர்கள் படிப்படியாக அரசாள்வோரையும் வாங்கும் அளவுக்கு உயர்ந்தார்கள். தொடர்ந்து உலக வளங்களையும் உலக நாடுகளையும் எவ்வாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து அனைவரையும் அடிமைகளாக்கி வைத்துள்ளார்கள் என்பதை சென்ற கட்டுரையில் கண்டோம்.

## வங்கியின்றி வாழ்க்கையில்லை

500 / 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அரசாங்கத்தின் இந்தப் புதிய அறிவிப்பின் பின்னால் உள்ள சதியைப் பற்றி இன்றைய நிகழ்வுகளை வைத்துப் புரிந்துகொள்ள முடியும். கடந்த சில நாட்களில் நாட்டு மக்களைச் சொல்லொணாத் துன்பங்களுக்கு நிர்பந்தமாக உட்படுத்தி அவர்களிடையே வங்கியில் கணக்கில்லாமல் வாழமுடியாது ஒரு மனோநிலையை உண்டாக்கியிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். வங்கிகளுக்கு அடிமையானோரால் பொருட்களை கொடுக்கவும் வாங்கவும் முடிகிறது. அல்லாதவர்களால் முடிவதில்லை என்பதை நடைமுறையாக உருவாக்கிக் காட்டி அந்த எண்ணத்தை பெரும்பான்மையான மக்களிடையே விதைத்துவிட்டதை நாம் இன்று காண்கிறோம்.

ஆம், அனைத்து மக்களையும் வங்கி உரிமையாளர்களுக்கு அடிமைப் படுத்துவது என்பதுதான் அந்த சதி. அதாவது உங்கள் பொருளாதாரத்தின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பரிமாற்றமும் வங்கிகள் மூலமாக நடைபெறும்போது அவர்களால் அந்தப் பொருளாதாரத்தை தாங்கள்





விரும்பியோருக்கு கடனாகக் கொடுத்து வட்டிஈட்டவோ வாரியிரைக்கவோ செய்யமுடியும் அல்லவா? வராக்கடன் என்ற பெயரில் இந்தியாவின் பெரும் பணமுதலைகள் வாங்கியிருந்த 7016 கோடி ரூபாய் கடன்களை பாரத ஸ்டேட் வங்கி தள்ளுபடி செய்துள்ளதையும் இங்கு குறிப்பிடலாம். இதில் King Fishar என்ற பெயரில் மது மற்றும் விமானக் கம்பெனிகள் வைத்திருந்த விஜய் மால்யா வாங்கியிருந்த 1200 கோடி ரூபாயும் இதில் அடக்கம்.

வங்கி உரிமையாளர்கள் நாம் தேர்ந்தெடுத்த அரசாங்கம்தானே என்று உங்களுக்கு சந்தேகம் எழலாம். உண்மையில் நமது தலைமை வங்கியான ரிசர்வ் வங்கி உட்பட உலக நாடுகளின் அனைத்து தலைமை வங்கிகளும் சரி நம்மை ஆள்வோரும் சரி ஒரு குறிப்பிட்ட இரகசிய சமுதாயத்தின் கீழேதான் உள்ளன என்பதை முந்தைய கட்டுரையில் கண்டோம்.

ஆக, நம்மில் ஒவ்வொருவரிடமும் பொருட்களும் சேவைகளும் உள்ளன. அவற்றை நமக்குள் பரிமாறிக்கொள்ள இந்த வங்கிகள் இல்லாமல் முடியாது. அதாவது வட்டிஈட்டும் வங்கியாளர்களுக்கு ஒருபுறமும் அரசாங்கத்தின் மூலம் திணிக்கப்படும் வரிச்சுமைக்கு மறுபுறமும் நம்மை அடிமைகளாக்கி வைத்து நம்மை அழகு பார்ப்பது யார்?

இப்போது உங்களுக்குப் புரிந்திருக்குமே!

# நபிகளார் கற்றுத்தந்த பிரார்த்தனை

இன்று நாடு அனுபவித்து வரும் சோதனைகள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களால் முன்னரே எச்சரிக்கப்பட்ட- இறுதி காலகட்டத்தில் வர இருக்கின்ற- தஜ்ஜால் (கிறிஸ்துவர்கள் இவனை அந்திக் கிறிஸ்து என்பார்கள்) என்பவன் விளைவிக்க இருக்கும் சோதனைகளின் முன்னோடியாக தென்படுகின்றன.

கீழே நபிகளார் கற்றுத்தந்த பிரார்த்தனைகளில் ஒன்று:

- **இறைவா சோம்பலிலிருந்தும், தள்ளாமையிலிருந்தும், பாவத்திலிருந்தும், கடனிலிருந்தும், மண்ணறையின் சோதனையிலிருந்தும் அதன் வேதனையிலிருந்தும், நரகத்தின் சோதனையிலிருந்தும் அதன் வேதனையிலிருந்தும், செல்வத்தின் தீமைகளிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாப்புக் கோருகிறேன். மேலும், வறுமையின் சோதனையிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். (பெருங்குழப்பவாதியான) மஸீஹுத் தஜ்ஜாலின் சோதனையிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். இறைவா! பனிக்கட்டியாலும் ஆலங்கட்டியாலும் என் தவறுகளை என்னிலிருந்து கழுவுவாயாக! மேலும், அழுக்கிலிருந்து வெண்மையான ஆடையை நீ தூய்மைப்படுத்துவதைப் போன்று தவறுகளிலிருந்து என் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவாயாக! கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே நீ ஏற்படுத்திய இடைவெளியைப் போன்று எனக்கும் என் தவறுகளுக்குமிடையே நீ இடைவெளியை ஏற்படுத்துவாயாக என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்தார்கள். இச்செய்தியை ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**

**(நூல் : புகாரி : 6368, 3375, 6376, 6377)**

# பூனைக்கு மணி கட்டுவது யார்?

● நான் வியர்வை சிந்தி உழைத்து சேமித்ததை, நான் வயலில் கஷ்டப்பட்டு நின்று அறுவடை செய்ததை மதிப்பிட இவர்கள் யார்? என் சேமிப்பையும் உழைப்பையும் செல்லாததாக்க இவர்களுக்கு அதிகாரம் கொடுத்தது யார்?

● எவனோ ஒருவன் திருடியதற்காக நான் ஏன் தண்டிக்கப் பட வேண்டும்? இரவுபகலாக நான் ஏன் தெருவில் நின்று சீரழிய வேண்டும்? என் மனைவி மக்கள் ஏன் பட்டினி கிடைக்கவேண்டும்?

● மதுவையும் விபச்சாரத்தையும் வைத்துப் பிழைக்கும் சிலர் செய்யும் வரிஏய்ப்பும் வராக்கடனும் என் தலையில் ஏன் சுமத்தப்பட வேண்டும்?



● கார்பரேட் முதலாளிகள் வங்கிகளை ஏய்த்த 12 இலட்சம் கோடி ரூபாய்க்காக நான் ஏன் பலிகடா ஆக வேண்டும்?

● என்னிடமும் பொருள் இருக்கிறது சேவையும் இருக்கிறது.. உங்களிடமும் அவை உள்ளன. நமக்கிடையே அவற்றைப் பரிமாறிக்கொள்ள இடையில் ஒருவன் எதற்கு? நமக்கு சொந்தமான ஒரு பொருளை ஒரு இடத்தரகன் வட்டி ஈட்டி உண்பதற்காக அவனிடம் நான் ஏன் அடகுவைக்க வேண்டும்? நம்மை ஏமாற்றிப் பிழைக்கும் அவனுக்கு நாம் ஏன் கப்பம் கட்ட வேண்டும்?

இதுபோன்ற உரிமைக்குரல்கள் நாடெங்கும் மக்களால் எழுப்பப்பட்டு வருவதை நாம் கேட்க முடிகிறது. பத்திரிகைகளிலும் சமூக வலைதளங்களிலும் அவற்றைக் காண முடிகிறது.

நாட்டில் மக்கள் வரலாறு காணாத அநியாயத்திற்கு இரையாகி இருப்பதையும் இந்த அநியாயத்தை எதிர்க்க வேண்டும் என்ற உணர்வு அவர்களிடையே எழுந்திருப்பதையும் நாம் உணர முடிகிறது. ஆனால் இந்த அநியாயத்தின் காரணகர்த்தாக்கள் உண்மையில் இன்று நம்மை ஆள்பவர்கள் அல்ல. காரணகர்த்தாக்கள் என்று யாரை நாம் கருதுகிறோமோ அவர்கள் வெறும் எய்யப்பட்ட அம்புகளே. அனைத்து உலகையும் பின்னி நிற்கும் அதிபயங்கரமான சதித்திட்டத்தை வகுத்தவர்களால் எய்துவிடப்பட்டவர்களே அவர்கள். அந்த அம்புகளை எய்த கொடியோர்களை எதிர்கொள்வது என்பது எளிமையான ஒன்றல்ல. அவர்களை எதிர்கொள்ள மிக உறுதியான ஒரு மக்கள் இயக்கம் இருந்தால் மட்டுமே முடியும். அதுவும் உலகளாவியதாக இருக்கவேண்டும்.

### மனித நேயம் கொண்டோர் மீதுள்ள கடமை

உலகைச் சுற்றி பின்னப்பட்டுள்ள வஞ்சக வலை எவ்வளவுதான் சக்தி வாய்ந்ததாக இருந்தாலும் அதைப் பின்னியவர்களை எதிர்த்துப் போராடி அதில் இருந்து உலகைக் காப்பாற்ற வேண்டியது மனிதநேயம் கொண்ட ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். ஆனால் அதற்கான ஊக்கமும் உறுதியான கொள்கை நிலைப்பாடும் இல்லாமல் எவராலும் போராட்டக் களத்தில் நிலைத்து நிற்கமுடியாது. இதற்கு ஒரு உதாரணம் சோவியத் ரஷ்யாவும் அதன் கூட்டணி நாடுகளும். முதலாளித்துவ நாடுகளின் சதிகளில் இருந்து மக்களைக் காப்பாற்ற அவர்கள் ஆவேசத்தோடும் முழு அர்ப்பணிப்போடும் வருடங்களாகப் போராடினாலும் அவை தோல்வியையே தழுவின.

உணர்ச்சிபூர்வமான கொந்தளிப்பால் உந்தப்பட்டு சில மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஒரு சித்தாந்தம் கம்யுனிசம். மனிதனைப் பற்றியும் இவ்வுலகைப் பற்றியும் கம்யுனிசம் போதிக்கும் கண்ணோட்டம் மிகவும் குறுகியது. மனிதன் ஏனைய மிருகங்களில் ஒன்று, அவனது முக்கிய தேவை பொருளாதாரம், மனித புலன்களுக்கு எட்டியது மட்டுமே உலகம், அவன் வாழும் வரை மட்டுமே இவ்வுலகின் ஆயுள் என்பன போன்ற மிகக் குறுகிய நம்பிக்கைகள் அங்கு உண்டாவதால் அதை மீறி அவர்களால் சிந்திக்க முடிவதில்லை.

இவ்வாறு உண்மை மறுப்பு, மனிதனின் உளவியல் சார்ந்த விடயங்கள், தனிநபர் ஒழுக்கம், ஆன்மீகம் போன்றவைகளின் புறக்கணிப்பு, நன்மை,தீமை பற்றிய தெளிவின்மை என பலகுறைபாடுகள் கொண்ட ஒரு கொள்கையாக கம்யுனிசம் இருப்பதால் அனைத்து தரப்பு மக்களையும் அவர்களால் ஈர்க்க முடிவதில்லை. கொள்கை வாதிகளாலும் போராட்டக் களத்தில் நிலைத்து நிற்க முடியவில்லை. அங்கே போராளிகளின் தனிநபர் நல்லொழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாததால் போராட்டக் களத்தில் அவர்களால் நீடித்து நிற்கும் அளவுக்கு ஊக்கமும் தைரியமும் இல்லாமல் போனது. எதிரிகளால் அவர்களை வாங்கவும் இயக்கத்தை பலவீனப்படுத்தவும் முடிந்தது. கம்யுனிச ஆதிக்கம் பெற்றிருந்த நாடுகளையும் அவர்களால் சின்னாபின்னப்படுத்தவும் முடிந்தது.

**அநியாயங்களுக்கு அடிபணியாத இஸ்லாம்:**

ஆனால் இன்று இஸ்லாம் என்ற உலகளாவிய இயக்கம் மட்டுமே மேற்கூறப்பட்ட சதியாளர்களுக்கு அடங்காத சவாலாக நின்று களத்தில் போராடிக்கொண்டு இருக்கிறது. அதன் - இந்த மக்கள் எழுச்சி இயக்கத்தை ஒடுக்கும் முகமாகவே இஸ்லாத்தைத் தவறான ஒளியில் ஊடகங்கள் மூலம் சித்தரிக்கிறார்கள். இஸ்லாமியர்களுக்கு பயங்கரவாதப் பட்டம் கட்டி சிறைகளுக்குள் அடைத்து சித்திரவதைகள் செய்கிறார்கள். தங்களது கையாட்கள் மூலம் பச்சிளம் பாலகர்களையும் விட்டுவைக்காமல் கொன்று குவிக்கிறார்கள். இறுதியில் பழியை இஸ்லாமியர்கள் மீதே போட்டும் விடுகிறார்கள். இவர்கள் தங்கள் சக்திவாய்ந்த ஊடகங்கள் மூலம் நடத்தும் நாடகங்களை அப்பாவி மக்கள் அப்படியே நம்பி இஸ்லாமியர்களுக்கு எதிராகத் திரும்புகிறார்கள். ஈராக் மற்றும் சிரியாவில் இஸ்லாத்தின் பெயர் சொல்லி மிருகத்தனமான கொடுமைகள் நிகழ்த்தி வரும் ஐஎஸ்ஐஎஸ் என்ற அமைப்பை உருவாக்கியவர்கள் இஸ்ரேலின் மா∴பியா அமைப்பான மொஸாதும் அமெரிக்காவின் **CIA**வும்தான் என்பது சமீபத்தில் விக்கிலீக்ஸ மூலம் கசிந்த தகவல்களில் ஒன்று.

# நம்பிக்கை கொண்டோருக்கு மட்டுமே!

● நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

இறை நம்பிக்கையாளரின் நிலையைக் கண்டு நான் வியப்படைகிறேன். அவரது (வாழ்வின்) அனைத்து அம்சங்களும் (அவருக்கு) நன்மையாகவே அமைகின்றன. இறை நம்பிக்கையாளருக்கு அல்லாமல் வேறெவருக்கும் இது கிட்டுவதில்லை. அவருக்கு ஏதேனும் மகிழ்ச்சி ஏற்பட்டால், அவர் நன்றி செலுத்துகிறார். அது அவருக்கு நன்மையாக அமைகிறது. அவருக்கு ஏதேனும் துயரம் நேர்ந்தால், அவர் பொறுமை காக்கிறார். அதுவும் அவருக்கு நன்மையாக அமைந்து விடுகிறது. (நூல் : முஸ்லிம் 7692)

# இஸ்லாம் எப்படி அநியாயங்களுக்கு எதிராகப் போராடுகிறது?

இஸ்லாம் என்ற அரபு வார்த்தையின் பொருள் கீழ்படிதல் என்பதாகும். இதன் மற்றொரு பொருள் அமைதி என்பதாகும். அதாவது இறைவனுக்கு கீழ்படிந்து வாழ்ந்தால் இவ்வுலகிலும் அமைதி பெறலாம் மறுமை வாழ்க்கையிலும் அமைதி பெறலாம் என்பது இம்மார்க்கம் முன்வைக்கும் தத்துவமாகும். அதாவது இறைவன் எதை எல்லாம் செய்யவேண்டும் என்று நமக்கு கட்டளை இடுகிறானோ அதை செய்ய வேண்டும். அதற்குப் பெயர்தான் நன்மை அல்லது புண்ணியம் அல்லது தர்மம் என்பது.

எதையெல்லாம் செய்யக் கூடாது என்று தடுக்கிறானோ அவற்றைச் செய்யக்கூடாது. அதற்குப் பெயர்தான் தீமை அல்லது பாவம் அல்லது அதர்மம் என்பது. யார் இந்தக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு அதன்படி வாழ்கிராரோ அவருக்குப் பெயர்தான் அரபு மொழியில் முஸ்லிம் (கீழ்படிபவன்) என்று வழங்கப்படும்.

● இக்கோட்பாட்டை யார் வேண்டுமானாலும் ஏற்றுக் கொண்டு அதன்படி வாழலாம். இது ஒரு தனிப்பட்ட குலத்துக்கோ, நாட்டுக்கோ இனத்துக்கோ சொந்தமானது அல்ல. இது புதிய ஒரு மார்க்கமும் அல்ல. எல்லாக் காலத்திலும் இப்பூமியில் பல்வேறு பாகங்களுக்கு அனுப்பப்பட்ட இறைவனின் தூதர்கள் இக்கொட்பாட்டைத்தான் மக்களுக்கு போதித்தார்கள். அதே கோட்பாடுதான் இன்று இறுதி இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) மூலம் இஸ்லாம் என்ற பெயரில் மறு அறிமுகம் செய்யப் பட்டது.

● ஒன்றே மனித குலம், ஒருவனே இறைவன், அவனது கண்காணிப்பின் கீழ் உள்ளோம், நம் வினைகளுக்கு மறுமையில் விசாரணையும் அதற்கேற்ப சொர்க்கமும் நரகமும் வாய்க்க உள்ளது என்ற அடிப்படை உண்மைகளை மனித மனங்களில் முறையாக விதைத்து அவர்களை சீர்திருத்தி அவர்களின் கரங்களாலேயே ஒழுக்கம் நிறைந்த ஓர் உலகை கட்டியெழுப்ப இஸ்லாம் முனைகிறது.

**மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான் பின்னர் இவ்விரு வரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான் ..... நிச்சயமாக இறைவன் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான். (திருக்குர்ஆன் 4:1)**

● இஸ்லாம் உலகளாவிய மனித சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் வலியுறுத்துகிறது. இனத்தின், நிறத்தின், குலத்தின் மேன்மைகளைக் கூறி மக்களைப் பிரித்து சுரண்டி வாழ இடம்கொடுப்பதில்லை. இதன் காரணமாக மனிதகுலத்தைக் கூறுபோடும் பிரிவினை வாதங்களுக்கெதிரான உலகளாவிய ஒரு மக்கள் இயக்கமாக உருவெடுக்கிறது.

● படைத்த இறைவனை இடைத்தரகர்கள் இன்றி வீண் சடங்கு சம்பிரதாயங்கள் இன்றி நேரடியாக வணங்க இஸ்லாம் கற்பிப்பதால் கடவுளின் பெயரால் மக்களை ஏய்த்துப் பிழைக்கும் இடைத்தரகர்களையும் ஆதிக்க சக்திகளையும் அது அடையாளம் காட்டி அவர்களை செயலிழக்கச் செய்கிறது.

● இவ்வுலக வாழ்க்கை என்பது ஒரு பரீட்சை எனவும் இவ்வுலகம்

அதற்கான பரீட்சைக் கூடம் போன்றது என்றும் இவ்வுலகம் ஒருநாள் முழுக்க முழுக்க அழிக்கப் பட்டு பிறகு மீண்டும் அனைத்து மனிதர்களும் இறுதித் தீர்ப்புநாள் அன்று எழுப்பப்பட்டு விசாரிக்கப்படுவர் என்றும் அன்று பாவிகளுக்கு நரகமும் புண்ணியவான்களுக்கு சொர்க்கமும் விதிக்கப்படும் என்றும் இஸ்லாம் பகுத்தறிவு பூர்வமாக போதிக்கிறது. இங்கு மேற்கொள்ளப்படும் தியாகங்களுக்கு இறைவனிடம் மறுமையில் சொர்க்கம் பரிசாக வழங்கப் படுகிறது என்ற உண்மையை உணர்ந்த முஸ்லிம்கள் தர்மத்தை நிலைநாட்டும் பணியில் எப்படிப்பட்ட துன்பங்கள் சவால்கள் வந்தாலும் அவற்றை தைரியத்தோடு எதிர்கொள்கிறார்கள். தேவை நேரிடும்போது உயிரையும் தியாகம் செய்கிறார்கள்.

● தன் செயல்களுக்காக இறைவனுக்கு முன்னால் விசாரிக்கப் படுவோம் என்ற உணர்வு இருப்பதால் தீமைகளில் இருந்து விலகி இருக்கிறார்கள். இலஞ்சம் கையூட்டு, ஆசை வார்த்தைகள் காட்டி அவர்களை எதிரிகள் விலைபேசவோ வாங்கவோ முடிவதில்லை.

● உலகில் அமைதி நிலைநாட்டப்பட வேண்டுமானால் அநியாயங்களும் மனித உரிமை மீறல்களும் தடுக்கப்படவேண்டும். ஏட்டளவில் பேச்சளவில் என்று இல்லாமல் இஸ்லாம் நடைமுறையில் மக்களை அதற்கு வழிநடத்துகிறது.

● மனிதனை இக்கொள்கை சுயமரியாதை உணர்வோடு வாழத் தூண்டுவதால் அதன் காரணமாக மக்கள் விழிப்புணர்வு பெற்று ஆதிக்க சக்திகளுக்கும் அவர்களின் கைப்பாவை அரசர்களுக்கும் எதிராகத் திரும்புகிறார்கள். அவர்களின் அடிமைத் தளையில் இருந்து தங்கள் நாடுகளை விடுவிக்கவும் தங்கள் நாட்டுவளங்கள் கொள்ளை போவதைத் தடுக்கவும் போராடுகிறார்கள். இன்று சில அரபுநாடுகளில் நடக்கும் இந்தப் போராட்டத்தைத்தான் ஊடகங்கள் பயங்கரவாதச் செயல்களாக சித்தரிகின்றன.

● நன்மையை எவுவதையும் தீமையைத் தடுப்பதையும் இறைநம்பிக்கையின் ஒரு பாகமாகவே கற்பிக்கிறது இஸ்லாம்.

**மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள் (எனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள் தீயதை விட்டும் விலக்குகிறீர்கள்இன்னும் இறைவன் மேல் நம்பிக்கை கொள்கிறீர்கள் (திருக்குர்ஆன் 3:110)**

**'உங்களில் எவரேனும் தீமையைக் கண்டால் கையால் தடுக்க வேண்டும். இயலாவிட்டால் நாவால் தடுக்க வேண்டும். அதற்கும் இயலாவிட்டால் மனதால் வெறுக்க வேண்டும். இதுதான் இறைநம்பிக்கையின் இறுதிநிலையாகும்.' - நபிமொழி (நூல்: முஸ்லிம் 78)**

இவ்வாறு உலகெங்கும் பரவிக்கிடக்கும் மக்களை ஆங்காங்கே நடக்கும் அநியாயங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் அவற்றைக் கொண்டு பிழைப்பு நடத்தும் ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக விழித்தெழ வைக்கும் இயக்கமாக இஸ்லாம் செயல்படுகிறது. அவ்வாறு விழித்தெழும் மக்கள் அந்த ஆதிக்க சக்திகளின் அடிமைத்தளையில் இருந்து தங்கள் நாடுகளை விடுவிப்பதற்காக அவர்களின் கையாட்களுக்கும் கைப்பாவை அரசுகளுக்கும் எதிராகப் போர்க்கொடி தூக்குகிறார்கள்.

பூமியில் பரவிப் படர்ந்திருக்கும் அதர்மத்தின் நச்சு வலையை அழித்து தர்மத்தை நிலைநாட்டப் புறப்பட்ட இந்த தியாகிகளைத்தான் டிவியிலும் பத்திரிகைகளிலும் அன்றாடம் இஸ்லாமிய பயங்கரவாதிகள் என்று வருணிக்கப்படுவதை நீங்கள் காண்கிறீர்கள்.

# பாமரர்களுக்கும் படித்தவர்களுக்கும் பாடங்கள்

இயற்கையில் நாம் காணும் படைப்பினங்கள் ஒவ்வொன்றும் இறைவனது உள்ளமையையும் வல்லமையையும் எடுத்துரைக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன. அவற்றைத் திருக்குர்ஆன் "ஆயத்" (சான்றுகள்) என்ற வார்த்தையால் குறிப்பிடுகிறது. அதேபோலவே திருக்குர்ஆனின் வசனங்களுக்கும் "ஆயத" என்றே குறிப்பிடுகிறது. அதாவது இயற்கைச் சான்றுகளை எவ்வாறு ஆராய ஆராய அவற்றில் புதைந்துள்ள உண்மைகள் வெளிப்பட்டு அறிவியல் வளர்கிறதோ அவ்வாறே திருக்குர்ஆனின் வசனங்களும் ஆராய ஆராய தன்னுள் அடங்கியுள்ள பிரபஞ்ச இரகசியங்களை வெளிப்படுத்தும் சான்றுகளாகத் திகழ்கின்றன. இந்த வசனங்கள் அன்று பாலைவனத்தில் ஒட்டகங்களை மேய்த்துக்கொண்டிருந்த பாமரர்களையும் இறைவனைப்பற்றி சிந்தித்துணர வைத்தன. அறிவியல் முன்னேற்றம் கண்டுள்ள இன்று வாழும் மனிதனையும் அதற்கேற்ப சிந்திக்க வைப்பதை ஆராய்வோர் அறியலாம்.

உதாரணமாக ஒரு சில வசனங்களை இங்கு காண்போம்:

**பறக்கும் பறவைகளை பற்றி சிந்திப்பீர்:**



- **ஆகாய வெளியில் வசப்படுத்தப்பட்ட நிலையில் பறவையை அவர்கள் பார்க்கவில்லையா? அல்லாஹ்வைத் தவிர யாரும் அவற்றை (அந்தரத்தில்) நிறுத்தவில்லை. நம்பிக்கை கொள்கின்றவர்களுக்கு சமுதாயத்திற்கு இதில் பல சான்றுகள் உள்ளன.**

**(திருக்குர்ஆன் 16:79)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

மேற்கண்ட வசனங்களில் மிகப்பெரிய உண்மை உள்ளடங்கி இருக்கிறது. பூமி தன்னைத் தானே சுற்றுவதை நாம் அறிவோம். தன்னைத் தானே சுற்றுவதுடன் சூரியனையும் இந்தப் பூமி ஒரு வருடத்தில் வட்டமடித்து முடிக்கிறது. சூரியனைச் சுற்றுவதற்காக அது செல்லும் வேகம் மணிக்கு 1,07,000 கி.மீ. தூரம். மணிக்கு 1,07,000 கி.மீ. வேகத்தில் பூமி வேகமாக நகரும் போது, பூமி நகர்கின்ற திசையில் இருக்கின்ற அந்தப் பறவைகள் மீது மோத வேண்டும்.

பூமியின் ஈர்ப்பு சக்தி ஒரு குறிப்பிட்ட தொலைவு வரை இருப்பதால் அந்தப் பறவையைச் சேர்த்து இழுத்துக் கொண்டே போகிறது. முன் பக்கம் இருக்கும் பறவையை தள்ளிக் கொண்டும் பின்பக்கம் இருக்கின்ற பறவையை இழுத்துக் கொண்டும் பூமி நகர்கிறது. முன்பக்கம் பறக்கின்ற பறவையைத் தள்ளாமல் இந்தப் பூமி வேகமாகச் சென்றால் எந்தப் பறவையும் பறக்க முடியாது, பூமியில் மோதி செத்து விடும். இந்தப் பேருண்மையை இறைவன் தன் திருமறையில் அற்புதமான சொற்களால் கூறுகின்றான்.

**மின்னலை பற்றி சிந்தித்தல்:**

● **மின்னலை அச்சமூட்டுவதாகவும், நம்பிக்கையூட்டுவதாகவும் உங்களுக்கு அவன் காட்டுவதும், வானத்திலிருந்து தண்ணீரை இறக்கி, பூமி செத்த பிறகு அதன் மூலம் அதற்கு உயிரூட்டுவதும் அவனது சான்றுகளில் உள்ளவை. விளங்கும் சமுதாயத்துக்கு இதில் பல சான்றுகள் உள்ளன. (திருக்குர்ஆன் 30:24)**

● **அச்சத்தையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்துவதாக மின்னலை அவனே உங்களுக்குக் காட்டுகிறான். பளுவான மேகங்களையும் அவன் உருவாக்குகிறான். (திருக்குர்ஆன் 13:12)**



மின்னல் என்பது நமக்கு அச்சத்தை ஏற்படுத்துவதாகவும், நம்பிக்கையூட்டுவதாகவும், எதிர்பார்ப்பை ஏற்படுத்துவதாக அமைத்திருப்பதாகவும் படைத்த இறைவன் கூறுகிறான். இதில் பல சான்றுகளும் உள்ளடங்கியுள்ளன.

மழை மேகங்கள் தமக்குள் இருக்கும் அணுக்கள் பல வழிகளிலும் உராய்ந்தோ பிறவாறோ மின்னூட்டம் பெற்று விடுகின்றன. இப்படி ஏற்படும் மின்னல்கள் சில பொழுதுகளில் ஒரு மரத்தையோ நிலத்தையோ தாக்க வல்லவை. (இவ்வழியாக மேகங்களில் சேர்ந்திருந்த மின்னூட்டம் நிலத்திற்கு பாய்ந்து விடும்).

இம்மின்னல் நிலத்தில் உள்ள விலங்குகளையும், ஆட்களையும் கூட தாக்கும். இதனால் பலர் உயிரிழந்து உள்ளனர். இது நமக்கு மரண சிந்தனையை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. இப்படியான மின்னல்கள் ஏற்படுவதன் மூலம் மழை பொழியலாம் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்துவாக அமைந்துள்ளது!!

## நட்சத்திரங்களை பற்றி சிந்தித்தல்:

● **தரை மற்றும் கடலின் இருள்களில் நீங்கள் வழியை அறிந்து கொள்வதற்காக உங்களுக்காக நட்சத்திரங்களை அவனே ஏற்படுத்தினான். அறிகின்ற சமுதாயத்திற்குச் சான்றுகளை விளக்கியுள்ளோம். (திருக்குர்ஆன் 6:97)**

● **வானத்தில் நட்சத்திரங்களை அமைத்தோம். பார்ப்போருக்கு அதை அழகாக்கினோம். (திருக்குர்ஆன் 15:16)**

நட்சத்திரங்களின் பயன்பாடுகள் நாம் அறியாத பல இருப்பினும் இங்கு பூமியில் வாழும் மனிதர்களுக்கான பயன்பாட்டை இறைவன் இங்கு குறிப்பிடுகிறான். தரையிலும் கடலிலும் பயணிகளுக்கு வழிகாட்டும் அடையாளங்களாகத் திகழ்வதை இங்கு சிந்திக்கத் தூண்டுகிறான்.

இந்த நட்சத்திரங்கள் வானிற்கு அலங்காரமாகவும், நமக்கு வழிகாட்டும் கருவியாகவும் நிலையாக அமைக்கப்பட்டுள்ளது! இந்த நட்சத்திரத்தை மையமாக கொண்டுதான் எல்லா காலகட்டத்திலும் நாம் செல்லும் வழியினை அறிந்து கொள்ளவும் முடியும் என்கிறது விஞ்ஞானம். குறிப்பாக நான்கு பக்கமும் நீர் சூழ்ந்த கடற்பயணத்தில் இரவில் காரிருளில் வழி காட்டுவது விண்மீன் விளக்குகளே!



சுமார் 6000 நட்சத்திரங்கள் நம் கண்களால் அடையாளம் காண முடியும். நன்கு பிரகாசமுள்ள 58 நட்சத்திரங்கள் இருப்பிடத்தை அடையாளமாக வைத்து கடலில் மாலுமிகள் கப்பலை செலுத்துகின்றனர். இதைத்தான் நம்மை படைத்த இறைவன் முன்பே கூறுகின்றான்.. இந்த நட்சத்திரங்கள் வானத்தில் அமைக்கப்பட்ட அலங்காரங்களாகவும் வழிகாட்டும் கருவிகளாகவும் அமைக்கப்படுள்ளது.

## மேகமும் வான்மழையும்

**● அச்சத்தையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்துவதாக மின்னலை அவனே உங்களுக்குக் காட்டுகிறான். பளுவான மேகங்களையும் அவன் உருவாக்குகிறான். (திருக்குர்ஆன் 13:12)**

**● அல்லாஹ் மேகங்களை இழுத்து அவற்றை ஒன்றாக்குவதையும், பின்னர் அதை அடுக்கடுக்காக அமைப்பதையும் நீர் அறியவில்லையா? அதன் மத்தியில் மழை வெளிப்படுவதைக் காண்கிறீர்! வானத்திலிருந்து அதில் உள்ள (பனி) மலைகளிலிருந்து ஆலங்கட்டியையும் இறக்குகிறான். தான் நாடியோருக்கு அதைப் பெறச் செய்கிறான். தான் நாடியோரை விட்டும் திருப்பி விடுகிறான். அதன் மின்னல் ஒளி பார்வைகளைப் பறிக்கப் பார்க்கிறது. (திருக்குர்ஆன் 24:43)**



மேகங்கள் நமக்கு வானில் நீரை தேக்கிவைக்கும் குளங்களாகவும், நிழலளிக்கும் குடைகளாகவும் இருக்கின்றன. மேற்கண்ட வசனத்தில் ”வானில் மழை நீர் மேகங்கள் மூலம் சேமிக்கப்பட்டு, பூமியில் பொழியப்படுகின்றது” என்ற அறிவியல் உண்மை விளக்கப்படுகிறது. பூமியில் உள்ள நீரை சூரியன் நீராவியாக மாற்றி மேலே இழுத்துச் சென்று அந்தரத்தில் மேகமாக நிறுத்தியிருப்பதை இன்று அனைவரும் அறிந்து வைத்திருக்கிறோம்.

இந்த பளுவான மேகங்களின் பிரமாண்டத்தைப் பற்றிப் பெரும்பாலான மக்கள் இன்று கூட அறிந்திருக்கவில்லை. மேலே இழுத்துச் செல்லப்படும் நீராவி யானது, ஒன்றோடொன்றாக இழுத்து இணைக்கப்பட்டு ஆலங்கட்டி (பனிக்கட்டி) தொகுப்புகளாக மாற்றப்படுகிறது. இந்நிலையில் மின் காந்தத் தூண்டுதல் ஏற்பட்டவுடன், பனிக் கட்டிகள் உருகி தண்ணீரைக் கொட்டுகின்றன. இதுவே மழையின் இரகசியமாகும். வானிலை ஆராய்ச்சியாளர்கள் மிக அண்மையில்தான் மேகங்களின் உருவாக்கம், அமைப்பு, மழை உருவாகும் தொழில் நுட்பம் ஆகிய தகவல்களை நவீன தொழினுட்ப முறைகளின் மூலம் அறிந்துகொண்டனர்.

எழுதப் படிக்கத் தெரியாத நபியாகிய முஹம்மது நபி (ஸல்) அவர்கள் 1400 வருடங்களுக்கு முன்பு இந்த உண்மையை தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை.. இதைப்பற்றி நபிகள் நாயகத்திற்கு சொல்லிக்கொடுத்தது யாராக இருக்க முடியும்! படைத்தவனை தவிர மற்ற எவராலும் சொல்லித்தந்திருக்க இயலாது. இப்படியான மேகங்களின் செயல்பாடு வியக்கத்தக்கது.

**நன்றி : முஹம்மது அஸ்லம்**

# பிறவிப்பயனை வீணடிக்கும் நாத்திகம்


நம் புலன்களுக்கு எட்டும் தகவல்களைக் கொண்டு எட்டாத வி'யங்களைப் பற்றி ஆராய்ந்து அறிவதுதான் பகுத்தறிவு என்பது. ஆனால் பகுத்தறிவுக்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளும் நாத்திகர்கள் தங்கள் புலன்களுக்கு எட்டாத விடயங்களை ஆராயக்கூட முற்படாமல் அப்பட்டமாக மறுக்கும் போக்கை எப்படி பகுத்தறிவு அல்லது முற்போக்கு என்று சொல்லிக்கொள்ள முடியும். தன் புலன்களுக்கு எட்டியது மட்டுமே உலகம் அதை மீறி ஒன்றும் இல்லை என்பதும் தன் ஆயுள்தான் இப்பிரபஞ்சத்துக்கும் ஆயுள் அதை மீறி ஒன்றும் இல்லை என்று வாதிடுவது எப்படி பகுத்தறிவு வாதமாகும்?

மரணம் என்பது யாரும் மறுக்கமுடியாத ஒன்று. மரணத்திற்குப்பின் வரும் வாஸ்தவம் எதுவாகிலும் அதையும் நாம் எதிர்கொண்டே ஆகவேண்டும். இவ்வுலக வாழ்வின் வாஸ்தவங்களை ஆராய்ந்து மரணத்துக்குப் பின் என்ன என்பதைப் பகுத்து அறிவதே உண்மையில் பகுத்தறிவு! கண்ணால் நேரடியாகக் கண்டால் மட்டுமே மெய், மற்றவை எல்லாம் பொய் என்று பிதற்றுவது பகுத்தறிவு மறுப்பும் அறியாமையும் அறிவீனமும் ஆகும்!

மனிதனுக்கு மரணம் இருப்பதைப் போலவே இந்த பிரபஞ்சத்திற்கும் முடிவு உண்டு என்கிறது இறைவனின் வேதம். அதாவது இந்தத் தற்காலிக உலகம் முழுமையாக அழிக்கப்படும், மீண்டும் நீதிவிசாரணைக்காக அனைவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்ற உண்மையை இறைவனை மறுப்போரும் பகுத்துணரும் வண்ணம் திருமறைக் குர்ஆன் எடுத்துரைக்கிறது:

**நீங்கள் கடந்து வந்த கட்டங்களைப் பாருங்கள்:**

- **22: 5. மனிதர்களே! மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவதில் நீங்கள் சந்தேகத்தில் இருந்தால் உங்களுக்குத்தெளிவுபடுத்துகிறோம். உங்களை மண்ணாலும், பின்னர் விந்தாலும், பின்னர் கருவுற்ற சினைமுட்டையாலும் பின்னர் முழுமைப் படுத்தப்பட்டதும் முழுமைப்படுத்தப்படாததுமான தசைக்கட்டியாலும் படைத்தோம். நாம் நாடியதைக் கருவறைகளில் குறிப்பிட்ட காலம் வரை நிலைபெறச் செய்கிறோம். பின்னர் உங்களைக் குழந்தையாக வெளிப்படுத்துகிறோம். பின்னர் உங்கள் பருவத்தை அடைகின்றீர்கள். உங்களில் கைப்பற்றப்படுவோரும் உள்ளனர். அறிந்த பின் எதையும் அறியாமல் போவதற்காக தள்ளாத வயது வரை கொண்டு செல்லப்படுவோரும் உங்களில் உள்ளனர். பூமியை வறண்டதாகக்**



**காண்கிறீர். அதன் மீது நாம் தண்ணீரை இறக்கும் போது, அது செழித்து வளர்ந்து அழகான ஒவ்வொரு வகையையும் முளைக்கச் செய்கிறது.**

### மீண்டும் உயிர்த்தெழுதல் மிகப் பக்குவமாக நிகழும்



● **75:3, 4 (மரித்து உக்கிப்போன) மனிதனின் எலும்புகளை நாம் ஒன்று சேர்க்கவே மாட்டோம் என்று மனிதன் எண்ணுகின்றானா? அன்று, அவன் நுனி விரல்களையும் (முன்னிருந்தவாறே) செவ்வையாக்க நாம் ஆற்றலுடையோம்.**

### உங்களைச் சுற்றுமுள்ள அத்தாட்சிகளைப் பாருங்கள்:

நம் புலன்களுக்கு எட்டும் தகவல்களைக் கொண்டு எட்டாத விஷயங்களைப் பற்றி ஆராய்ந்து அறிவதுதான் பகுத்தறிவு என்பது. அவ்வாறு பகுத்தறிவால் ஆராயச் சொல்கிறான்:

● **41:39. பூமியானது காய்ந்து வரண்டு கிடப்பதை நீர் பார்ப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் நின்றுள்ளதாகும் அதன் மீது நாம் மழையை பொழியச் செய்தால், அது (புற் பூண்டுகள் கிளம்பிப்) பசுமையாக வளர்கிறது (இவ்வாறு மரித்த பூமியை) உயிர்ப்பித்தவனே, நிச்சயமாக இறந்தவர்களையும் திட்டமாக உயிர்ப்பிக்கிறவன் நிச்சயமாக அவன் எல்லாப் பொருட்கள் மீதும் பேராற்றல் உடையவன்.**

● **30:19. அவனே உயிரற்றதிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துகிறான் உயிருள்ளதிலிருந்து உயிரற்றதை வெளிப்படுத்துகிறான் இந்தப் பூமியை அது இறந்தபின் உயிர்ப்பிக்கிறான் இவ்வாறே (மரித்தபின் மறுமையில்) நீங்களும் வெளிப்படுத்தப்படுவீர்கள்.**

எனவே மறுமை என்ற மறுக்கவியலா நிலையை எதிர்கொள்ள இன்றே தயார்செய்து கொள்வோம்.

# வாசகர் எண்ணம்

● கடந்த 1 வருடமாக இந்த இதழின் வாசகன். புதுக்கல்லூரி தமிழ் துறையில் பணியாற்றுகிறேன். இந்த மாத இதழ் மிகச் சிறப்பாக உள்ளது. தலாக் சொல்லும் முறை, அதில் நன்மை தீமைகள் ,சவுதியில் இளவரசருக்கு மரண தண்டனை, விவேகமான முறையில் விவாக ரத்து, இஸ்லாமிய சட்டங்கள் பற்றிய செய்திகள் என்னை மிகவும் கவர்ந்தன. இந்த இதழ் எனக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டும். நான் தினமும் இஸ்லாமிய மற்றும் இந்து மாணவர்களோடு உரையாடுகிறேன். அவர்களோடு கருத்துகள் பரிமாறிக்கொள்ள மிகவும் உதவியாக இருக்கும்.

**- பேராசிரியர் கம்பீரன், தமிழ் துறை, புதுக்கல்லூரி, சென்னை**

● நான் ஓய்வில் இருக்கும் ஆசிரியர். என் மனைவி நல்லாசிரியர் விருது பெற்றவர். உங்கள் இதழ் பற்றி அறிந்தோம். நானும் என் மனைவியும் படிக்க ஆவலாக உள்ளோம். இதழை எங்கள் முகவரிக்கு தொடர்ந்து அனுப்பவும்

**- நல்லாசிரியர் சுந்தராம்பாள், நல்லாசிரியர் சுப்பையா, தேவகோட்டை, சிவகங்கை**

● எனக்கு 87 வயது. உங்கள் இதழை சில நண்பர்களிடம் வாங்கிப் படித்து வந்தேன். என் வயதின் நிமித்தம் தற்போது அவர்களிடம் போக முடிவதில்லை. கடந்த மாதம் சந்தாவும் அனுப்ப்யுள்ளேன். இதழை தொடர்ந்து அனுப்பவும்.

**- எம்.ஏ. மதார், சென்னை 44**

# வறுமையும் செல்வமும் சோதனையே

இந்த தற்காலிக வாழ்க்கையை ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகத்தை அதற்குரிய பரீட்சைக்கூடமாகவும் இறைவன் அமைத்துள்ளான். இதைப் முழுமையாகப் புரிந்துகொண்டு செயலாற்றுவோரே இங்கு வெற்றியாளர்கள்.

**● உங்களில் எவர் செயல்களால் மிகவும் அழகானவர் என்பதைச் சோதிப்பதற்காக அவன், மரணத்தையும் வாழ்வையும் படைத்தான் மேலும், அவன் (யாவரையும்) மிகைத்தவன் மிக மன்னிப்பவன்.**

**(திருக்குர்ஆன் 67:2)**

இந்த பரீட்சையின் ஒரு பாகமே வறுமையும் செல்வமும். பொருளாதாரத்தைத் திரட்டும்போதும், அதை அனுபவிக்கும்போதும் மனிதன் எல்லை மீறுவதற்குக் காரணம் பொருளாதாரமும், வறுமையும் நம்மைச் சோதித்துப் பார்ப்பதற்காக இறைவன் வைக்கும் பரீட்சையாகும் என்பதைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதுதான்.

## வறுமையால் சோதனை

**● மனிதனை அவனது இறைவன் மரியாதையுடன் வாழச் செய்து இன்பத்தையும் வழங்கி சோதிக்கும்போது 'என் இறைவன் என்னைக் கண்ணியமாக நடத்தினான்" என்று கூறுகிறான். அவனது செல்வத்தை அளவுடன் வழங்கி சோதிக்கும்போது 'என் இறைவன் என்னை அவமானப்படுத்தி விட்டான்" எனக் கூறுகிறான். (திருக்குர்ஆன் 89 : 15, 16)**

செல்வத்தைக் கொடுத்து சோதிப்பது போல் செல்வத்தை தடுத்தும் இறைவன் சோதிப்பான்.

**ஸ்ரீ உங்களுக்கு முன் சென்றோருக்கு ஏற்பட்டது போல் உங்களுக்கும் ஏற்படாமல் சொர்க்கத்தில் நுழையலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? அவர்களுக்கு வறுமையும், துன்பமும் ஏற்பட்டன. 'அல்லாஹ்வின் உதவி எப்போது?" என்று (இறைத்) தூதரும் அவருடன் உள்ள நம்பிக்கை கொண்டோரும் கூறுமளவுக்கு அலைக்கழிக்கப்பட்டனர். கவனத்தில் கொள்க! அல்லாஹ்வின் உதவி அருகிலேயே உள்ளது. (திருக்குர்ஆன் 2: 214)**

● நபிகள் நாயகம் (ஸல்) ஒரு சந்தர்பத்தில் தனது தோழர்களுக்குக் கூறினார்கள்:

**'அல்லாஹ்வின் மீதாணையாக! உங்களுக்கு வறுமை ஏற்பட்டு விடும் என்று நான் அஞ்சவில்லை. ஆயினும் உங்களுக்கு முன்னிருந்தவர்களுக்கு உலகச் செல்வம் அதிகமாகக் கொடுக்கப்பட்டதைப் போல் உங்களுக்கும் அதிகமாகக் கொடுக்கப்பட்டு, அவர்கள் அதற்காகப் போட்டியிட்டதைப் போல் நீங்களும் போட்டியிடும்போது, அவர்களை அது அழித்து விட்டதைப் போல் உங்களையும் அது அழித்து விடுமோ என்றுதான் நான் அஞ்சுகிறேன்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் : புகாரி 3158, 4015, 6425)**

## செல்வமும் வறுமையும் இறைநாட்டமே

**● தான் நாடியோருக்கு அல்லாஹ் செல்வத்தைத் தாராளமாக வழங்குகிறான். குறைத்தும் வழங்குகிறான். அவர்கள் இவ்வுலக வாழ்க்கையின் மூலம் மகிழ்ச்சியடைகின்றனர். மறுமையுடன் ஒப்பிடும்போது இவ்வுலக வாழ்க்கை அற்ப சுகம் தவிர வேறில்லை. (திருக்குர்ஆன் 13:26)**

# இறுதிநாள் நெருங்க நெருங்க..

இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் உலகின் இறுதி நெருங்கும்போது நடக்கக்கூடிய நிகழ்வுகள் சிலவற்றை முன்னறிவிப்பு செய்துள்ளார்கள் சுருக்கமாக அவை:

● “நானும் இறுதி நாளும் இப்படி இணைத்து அனுப்பட்டிருக்கிறோம்“ என்று தன் இரு விரல்களையும் சேர்த்துப் பிடித்துக் காட்டினார்கள்.(புகாரி)

● ஒரு பெண் தனது எஜமானியைப் பெற்றெடுத்தால் அது யுக முடிவு நாளின் அடையாளங்களில் ஒன்றாகும் (புகாரி)

● வறுமை நிலையில் (அரை) நிர்வாணத்துடனும் வெறும் காலுடனும் ஆடகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் மக்களின் தலைவர்களாக ஆவது யுக முடிவு நாளின் அடையாளங்களில் ஒன்று (புகாரி)

● ஒட்டகம் மேய்த்துத் திரிந்தவர்கள் மிக உயரமான கட்டடங்களைக் கட்டி வாழ்வார்கள் (புகாரி)

● யுக முடிவு நாள் நெருங்கும் போது விபச்சாரமும், மதுவும் பெருகும் (புகாரி)

● ‘நாணயம் பாழாக்கப்படும் போது அந்த நாளை எதிர் நோக்கு” என்று நபிகள் நாயகம் அவர்கள் கூறிய போது ‘எவ்வாறு பாழ்படுத்தப்படும்?” என்று ஒருவர் கேட்டார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ‘தகுதியற்றவர்களிடம் ஒரு காரியம் ஒப்படைக்கப்படும் போது அந்த நாளை எதிர் நோக்கு” என்று விடையளித்தார்கள். (புகாரி)

● செல்வம் பொங்கிப் பிரவாகித்து, அதற்கான ஸகாத்தைப் பெறுவதற்கு எவரும் கிடைக்காத நிலையும், அரபுப் பிரதேசம் நதிகளும், சோலைகளும் கொண்டதாக மாறும் நிலையும் ஏற்படாமல் அந்த நாள் ஏற்படாது (முஸ்லிம்)

● காலம் சுருங்கும் வரை அந்த நாள் ஏற்படாது. ஒரு வருடம் ஒரு வாரம் போலாகி விடும். ஒரு வாரம் ஒரு நாள் போலாகும். ஒரு நாள் ஒரு மணி நேரம் போல் ஆகும். ஒரு மணி என்பது ஒரு விநாடி போன்று ஆகும். (திர்மிதீ)

● கொலைகள் அதிகரிப்பதும் யுக முடிவு நாளின் அடையாளம் என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளனர். (புகாரி)

● பூகம்பங்கள் அதிகரிப்பதும் யுக முடிவு நாளின் அடையாளமாகும் (புகாரி)

● ஒரு காலம் வரும், இந்த அரபுப் பிரதேசம் செல்வச் செழிப்பாக, சோலையாக மாறும் வரை யுக முடிவுநாள் வராது. (முஸ்லிம் -157)

● விபச்சாரம் விவசாயமாய் நடக்கும். எந்த அளவுக்கு என்றால் பெண்கள் நடுவீதிகளில் நின்று விபச்சாரம் புரிவர். விபச்சாரத்தின் பக்கம் பகிரங்கமாக மற்றவர்களை அழைப்பாள். எவரும் அதனை ஆட்சேபிக்க மாட்டார்கள். அக்காலத்தில் நல்லவன் யாரெனில், இச்செயலை கொஞ்சம் மறைத்து செய்யக் கூடாதா? என்று சொல்பவன்தான். (புஹாரி)

● தகாத காரியங்களில் (விபச்சாரத்தில்) ஈடுபட்டால் உங்களுக்கு முன்னர் வாழ்ந்த சமுதாயங்கள் சந்தித்திராத உயிர்க்கொல்லி நோய் வரும். (இப்னுமாஜா)

● ஒரு காலம் வரும். மது அருந்துவது அதிகமாகிவிடும். தாறுமாறாக அதிகமாகும். அது இல்லாமல் இருக்கமாட்டார்கள். (புஹாரி)

● என்னுடைய சமுதாயத்தில் மதுவுக்கு மாற்று பெயர் சூட்டி நிச்சயமாக அதனை அருந்துவர். (அபூதாவூத்)

● அருகதையற்ற கெட்டவர்கள் தலைமைப் பதவியில் இருப்பார்கள். அநியாயக்கார அரசனை மக்கள் ஏற்றிப் போற்றுவர்.(புகாரி)

● ஆண்களுக்கு இருக்கும் வெட்க உணர்வு கூட பெண்களுக்கு இருக்காது.பெண்கள் ஆடையணிந்தும் நிர்வாணமாகக் காட்சியளிப்பர். (முஸ்லிம் : *3921*)

● சங்கீத உபகரணங்கள் மிகுதியாகும். இசையில் மயங்கும் மனிதர்கள் பெருகுவார்கள்.(திர்மிதி)

● காலையில் இறைநம்பிக்கையுடனும் மாலையில் இறைமறுப்புடனும் மக்கள் தீமையில் உழல்வார்கள். (திர்மிதி)

● எதற்காக யார் எப்படிச் செய்தார்கள் என்று தெரியாத அளவுக்கு கொலைகள் அதிகமாகும். (முஸ்லிம்)

● முஸ்லிம்கள் உலக சுகங்களுக்காகப் போட்டி போடுவார்கள். (புகாரி)

● பூமி அலங்கரிக்கப்படும். (திர்மிதி)

● மனிதர்கள் பள்ளிவாசல்களைக் காட்டி பெருமையடிப்பது யுக முடிவு நாளின் அடையாளங்களில் ஒன்றாகும் (நஸயி, அபூதாவூத்)

● கடைகள் பெருகி அருகருகே அமைவதும், நியாயத் தீர்ப்பு நாளின் அடையாளம். (அஹ்மத்)

● ஆடை அணிந்தும் நிர்வாணமாகத் தோற்றமளிக்கும் பெண்கள் இனி மேல் தோன்றுவார்கள். (முஸ்லிம்)

● விலங்கினங்கள் மனிதனிடம் பேசும் வரையிலும் தோல் சாட்டையும் செருப்பு வாரும் மனிதனிடம் பேசும் வரையிலும் யுக முடிவு நாள் ஏற்படாது (அஹ்மத்)

● தங்கள் நாவுகளை (மூல தனமாகக்) கொண்டு சாப்பிடக் கூடியவர்கள் தோன்றும் வரை யுக முடிவு நாள் ஏற்படாது (அஹ்மத்)

● தெரிந்தவருக்கு மட்டும் ஸலாம் கூறுவது யுக முடிவு நாளின் அடையாளம். (ஹாகிம்)

● இறந்தவர்களை அடக்கம் செய்த இடத்தைக் காணும் மனிதன் நானும் இவனைப் போல் செத்திருக்கக் கூடாதா என்று கூறாத வரை யுக முடிவு நாள் ஏற்படாது (புகாரி)

● ஏறத்தாழ முப்பது பொய்யர்கள் தம்மை இறைத்தூதர் என்று வாதிடும் வரை யுக முடிவு நாள் ஏற்படாது என்பதும் நபிமொழி. (புகாரி)

● யூப்ரடீஸ் (ஃபுராத்) நதி தங்கப் புதையலை வெளியே தள்ளும். அதைக் காண்பவர்கள் அதிலிருந்து எதையும் எடுக்க வேண்டாம் என்பதும் நபிமொழி. நூல் : புகாரி *7119*

● ஒருவர் தனது தர்மத்தை எடுத்துக் கொண்டு சென்று இன்னொருவருக்குக் கொடுப்பார். ‘நேற்று கொடுத்திருந்தால் நான் வாங்கியிருப்பேன் இன்று எனக்குத் தேவையில்லை” என்று அந்த மனிதன் கூறிவிடுவான் என்பதும் நபிமொழி. நூல் : புகாரி *1424*

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு ளுஆளு அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் ளுஆளு மூலம் சுநுளுருஆநு ளுஆளு என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.
- ஓராண்டு சந்தா : Rs. 60-
- ஈராண்டு சந்தா Rs.120-
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் விஷயமாக தொடர்பு எண்: **09845373775 / 08867971835**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross,Syed Block, AS palya
Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

**சென்னை: 9944656942, 9894442844, 8122264467 (மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம), 9840527687 (பல்லாவரம்), 9087836393 (தாம்பரம்), ஓசூர்:9994713191 தர்மபுரி:9842627171 கோவை:9003555755 திருப்பூர்:9150068919 குன்னூர்:9843622246 ஊட்டி:9543963412 ஈரோடு:7373947869, 9942958888 உடுமலை:9865051914 சேலம்:9994091364 திருச்சி:9865446344 மதுரை:9789341714 கும்பகோணம்:9597285160 விழுப்புரம்:9790290002 திருநெல்வேலி:9786230030 தென்காசி :9443695979 வேலூர்:9944656942 மயிலாடுதுறை:9942941190 திருவண்ணாமலை:9994453346 தூத்துக்குடி:8148059038 இளையான்குடி: 9842081210 அருப்புக்கோட்டை:9043899409 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்:9043758656 கே.ஜி.எஃப்:9845217262**

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No. KRNA/BGE/1057/2015-2017
Posted at BANGALORE PSO, Mysore Road , Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of Pages: 24+4
Licenced to post without prepayment . License No. WPP-308

**(PRINTED MATTER)**

To

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

ஏக இறைவனின் திருப்பெயரால்..

## திருக்குர்ஆன் வாசகர் வட்டம், பெங்களூரு
## அனைத்துமத கலந்துரையாடல் நிகழ்ச்சி

**HOLY QURAN READERS CIRCLE - ALL-FAITH MEET**

நாள்: 11. 12. 2016 ஞாயிறு
இன்ஷாஅல்லாஹ்
நேரம்: மாலை 5-8 மணி

இடம்: **IMA Hall, near Samad House, Bowring Hospital Road, Shivaji Nagar, Bangalore-1**

**சொற்பொழிவுகள் மற்றும் கேள்வி-பதில்**

- அனைத்து உயிர்களையும் அரவணைக்கும் ஷரீஅத்
- இஸ்லாம் பெற்றுத்தரும் மனித உரிமைகள்
- இஸ்லாம் வழங்கும் பொருளாதாரத் தீர்வுகள்

- அனைவரும் வருக!
- இறையருளைப் பெறுக!

நிகழ்ச்சி ஏற்பாடு:
House of Peace, Bangalore-17-
Ph. 9886001357

- பெண்களுக்கு தனி இடவசதி
- புத்தக விற்பனை ஸ்டால்
- சிற்றுண்டி